# போலீஸ் பார்வை

POLICE PARVAI

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-10 • Volume-10 • இதழ்-4 • Issue-4 • பிப்ரவரி-2025 • Febraury -2025 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV

E_Book: www.policeparvai.com




சாலையில் கிடந்த பணத்தை காவல் நிலையத்தில் ஒப்படைத்த ஆட்டோ ஓட்டுனருக்கு குவியும் பாராட்டுக்கள்



## வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம் பிள்ளை வரலாறு தெரியுமா?

## பழநி முருகன் கையில் உள்ள தண்டத்தில் ஒரு கிளி இருக்கிறது.. ஏன்?



## புதிய விதமான போதைப்பொருள் பள்ளிகளில் மாணவர்கள் ஜாக்கிரதை




என்றும் இளமையாக வாழ திருமூலர் கூறும் எளிய வழி..

இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்

www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...

பொன்னான வாய்ப்புகளால் 5 ராசிகளுக்கு வெற்றி மேல் வெற்றி


திருச்சியில் ஓர் இனிய உதயம்!
தரமான மளிகை
மலிவான
விலையில் உங்கள்
இல்லம் தேடி...
ஒரே ஒரு போன் கால்
SR
SR OUR GROCERY
Digital Market @ you're Door Step
No.8, Erumbeeswarar Nagar, Thiruverumbur,
Trichy - 620 013. Tamilnadu.
E-mail:srourgrocery@gmail.cm | Web: srourgrocery.com
9894890808
8610643636


ROLLER
SKATING
7 Star


AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU
Affiliated to :
AEROSKATOBALL FEDERATION OF INDIA
No.8, First Floor, Erumbeeswarar Nagar,
Thiruverumbur,
Trichy - 620 013.Tamil Nadu.
FIT INDIA
Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846
Tamilnadu

# போலீஸ் பார்வை

**பிப்ரவரி 2025 மலர் 10 இதழ் 4**



**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், V.Vivek Bomb, U.மதனகோபால்

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L. S.ரவிச்சந்திரன் M.A., B.L.

**சிறப்பு ஆலோசகர்** : S.செய்யத்அலி B.Sc., L.L.B.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், S.ராஜன், I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், K.மனோகரன், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன்

**சிறப்பு நிருபர்கள்** : SA.மகாதேவன், N.முரளிதரன், P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், KCM.சுரேஷ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, K.பாபு, R.மணிமாறன், M.வெங்கடேசலு

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், K.அருணாச்சலம், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், K.ராஜீவ்காந்தி, V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், P.மணிமாறன், J.ஜெயவேல்முருகன், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், S. ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், N.நவீன்குமார், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமன்ட், S.அன்வர் தீன், L.லூயில் பெர்ணான்டஸ், P.ராஜ ராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S.ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்(எ)பாலாஜி, K.S.அசோகன், C.பரமசிவம், R.செந்தில்குமார், A.சரவணன், S.பாலாஜி, S.நவநீத கிருஷ்ணன், K.செல்வ நயினார்



**அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise, No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099. Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com, Website.www.policeparvai.com**



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only

Designed by: QUEEN BEE CREATIVE







# ஒவ்வொரு இந்தியரின் கனவுகளை நிறைவேற்றும்

நாட்டு மக்களின் சேமிப்பு முதலீடு நுகர்வோர் வளர்ச்சி ஆகியவற்றை விரைவாக அதிகரிக்க மிகவும் வலுவான அடிப்படை தளத்தை அமைக்கக்கூடிய பட்ஜெட்டாக 2024-25 மத்திய பட்ஜெட் அமைந்துள்ளது.

இது ஏழைகள் விவசாயிகள் பெண்கள் மற்றும் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கான நோக்கங்களை நிறைவேற்றும் விதமாக உள்ளது. நாட்டின் வளர்ச்சி பயணத்தில் இதுஒரு முக்கியமானதாக கருதப்படுகிறது. 140 கோடி இந்தியர்களின் விருப்பங்களின் அடிப்படையில் அமைந்துள்ள பட்ஜெட். ஒவ்வொரு இந்தியரின் கனவுகளையும் நிறைவேற்றும் பட்ஜெட். இளைஞர்களுக்காக நாங்கள் பல துறைகளை திறந்து உள்ளோம். வளர்ச்சி அடைந்த இந்தியாவின் நோக்கத்தை சாதாரண குடிமகன் முன்னெடுத்து செல்லப்போகிற வழி அமைந்துள்ள பட்ஜெட். இந்த பட்ஜெட் பலத்தை பெருக்கும், சேமிப்பு முதலீடு நுகர்வு மற்றும் வளர்ச்சியை விரைவாக அதிகரிக்கும்.

இந்த மக்கள் பட்ஜெட்டுக்காக நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் அவரது முழு குழுவினரையும் நான் வாழ்த்துகிறேன். பொதுவாக பட்ஜெட்டின் கவனம் அரசாங்கத்தின் கருவூலம் எவ்வாறு நிரப்பப்படும் என்பதில்தான் இருக்கும். ஆனால், இந்த பட்ஜெட் அதற்கு நேர் மாறானது குடிமக்களின் பைகளை நிரப்பவும், சேமிப்பை அதிகரிக்க செய்யவும், நாட்டின் வளர்ச்சிக்கு குடிமக்கள் பங்களிப்பவர்களாக மாறவும் மிகவும் வலுவான அடித்தளத்தை அமைக்கிறது. சீர்திருத்தங்களை பொறுத்தவரை இந்த பட்ஜெட்டில் பலமுக்கியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அணுசக்தியில் தனியார் துறையை ஊக்குவிப்பது வரலாற்று சிறப்புமிக்கது. இது நாட்டின் வளர்ச்சியில் சிவில் அணுசக்தியின் பெரிய பங்களிப்பை உறுதி செய்யும் என்று பிரதமர் மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்த பட்ஜெட்டில் வேலை வாய்ப்புக்கான அனைத்து துறைகளுக்கும் எல்லா வகையிலும் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது இந்த பட்ஜெட்டில் ஆண்டுக்கு ரூபாய் 12 லட்சம் வரை வருமான வரி விலக்கு அழிக்கப்பட்டுள்ளது அனைத்து வருமான பிரிவினருக்கும் வரிகள் குறைக்கப்பட்டுள்ளன இது நமது நடுத்தர வர்க்கத்தினருக்கு பெரிதும் பயனளிக்கும் பட்ஜெட்டாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆசிரியர்**

**இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...**

போலீஸ் பார்வை மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.

ஓம் காளி ஓம் நமசிவாய




கருடசித்தர்

Dr.பாலகிருஷ்ண சுவாமி

எரசை, தேனி மாவட்டம்.




# சித்தர்களின் சிவஞானத் தத்துவங்கள்

நம் அகண்ட பாரத தேசம் ஒரு தெய்வீக தேசமாகும். அன்பு நிறைந்த தெய்வீக வழிபாட்டைக் கொண்ட தேசமாகும். சித்தர்களும், ஞானிகளும், யோகிகளும், ரிஷிகளும், தெய்வ பக்தர்களும், ஆழ்வார்களும், நாயன்மார்களும் ஆறு வழிபாட்டை மக்களுக்குப் போதித்தார்கள். அது சைவம், வைணவம், சாக்தம், கௌமாரம், காணபத்தியம், சௌரம் என்று ஆறு வழிபாடுகளை மக்களுக்குப் போதித்தார்கள். அந்த வகையில் சைவ, சமய வழிபாடான சிவஞானத் தத்துவ வழிபாடுகளை பற்றிப் பார்க்கலாம்.

**சிவ பக்தியே சிவ ஞானமாகும்**

சிவ ஞானத்தைப் போதித்தவர்கள் 18 சித்தர்களும், நாயன்மார்களும், ஞானிகளும், ரிஷிகளும், சிவனடியார்களும் ஆவார். சிவபக்தி இல்லாமல் சிவ ஞானமும் இல்லை. சிவ தத்துவமும் இல்லை. சிவ பக்தி மூலமாகவே சித்தர்கள் சிவ ஞான தத்துவங்களை அடைந்தார்கள்.

**சிவனே அனைத்திற்கும் கடவுளாவார்**

**ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன் ஈசனாவார்.**

**திருமூலர் திருமந்திரம்:** விண்ணும் மண்ணும் ஈசனே
தானே இருநிலம் தாங்கி விண்ணாய் நிற்கும்
தானே சுடும் அங்கி ஞாயிறும் திங்களும்
தானே மழைபொழி தையலுமாய் நிற்கும்
தானே தடவரை தண்கடல் ஆமெ.

**விளக்கம்:** ஈசனே இறைவன் ஆவார். விரிந்து அகன்ற மண்ணாகவும் உயர்ந்து எல்லையற்றவானாகவும் ஈசன் இருக்கின்றான். சுட்டெரிக்கும் அக்கினியாகத் திகழ்பவரும் ஈசனே. ஈசனே ஈசனே சூரியனாகவும் சந்திரனாகவும் இருக்கின்றார். மழையாய் பொழிந்து உலகின் வாட்டத்தைப் போக்கும் தாயாக இருந்து தன்னருள் புரிபவரும் ஈசனே ஆவார்.

மலையாகவும் மா கடலாகவும் உள்ளார். பஞ்ச பூதங்களும் அண்டம், பேரண்டம், பிரம்மாண்டம் அனைத்தும் ஈசனே ஆவார் என்று சிவனைப் பற்றி திருமூலர் கூறுகிறார்.

**சிவ பக்தியே சிவ முக்தியாகும்**

சிவ பெருமானிடம் வைக்கும் உண்மையான பக்தியே சிவ முக்தியைக் கொடுக்கும். சிவ பக்தியே சிவ ஞானத்தை கொடுக்கும். சிவ பக்தியே சிவ சித்தைக் கொடுக்கும். சிவ பக்தியே சிவ தத்துவத்தைக் கொடுக்கும். ஒருவன் சிவன் மேல் வைக்கும் உண்மையான பக்தியே அனைத்து சித்துகளையும், அனைத்து ஞானத் தத்துவங்களையும் அனைத்து சிவ மோட்சத்தையும் கொடுக்கும். சிவ பக்தியே அனைத்து உயிர்களின் மேல் அன்பையும் ஒழுக்கத்தையும் கொடுக்கும். சிவ தத்துவங்களையும் கொடுக்கும். சிவ பக்தியே அனைத்தும் கொடுக்கும்.

**சிவ வேடம், சிவ சின்னம்**

சிவ வேடம் அணிபவர்கள் உண்மையான சிவ பக்தியை கொண்டிருக்க வேண்டும். சிவ கோலமாகிய ருத்திராட்சம் அணிந்து திருநீறு பூசுபவர்கள் உண்மையாக சிவ நெறியில் வாழ வேண்டும்.

**திருமூலர் திருமந்திரம்**

பூதி அணிவது சாதனம் ஆதியில்
காதணி தாமிர குண்டலம் கண்டிகை
ஓதி அவர்க்கும் உருத்திர சாதனம்
தீதில் சிவ யோகி சாதனம் தேரியே

**தெளிவுரை:** சிவனடியார்கள் முதலில் கொள்ள வேண்டிய அடையாளச் சின்னம். திருநீறு அணிவதாகும். அதற்கடுத்து காதில் அணிந்து கொள்ள வேண்டிய செம்பிலான குண்டலம். பிறகு கழுத்தில் அணியும் ருத்திராட்சமாலையாகும். திருமறைகள் ஓதும் சிவ சின்னங்கள் ஆகும்.

**திருநீற்றின் தெய்வீக விளக்கம்**

திரு நீறு ஒவ்வொரு சிவனடியார்களும் பூசிக் கொள்ள வேண்டும். உண்மையான சிவ பக்தியோடு பூசிக் கொள்ள வேண்டும். திருநீற்றின் மகிமையை திருமூலர் தன்பாடலில் கூறுகின்றார். திருநீறு பூசுவதே சிவ பக்தியை முழுமையாக உருவாக்கும்.

**திருநீறு தெய்வீகம்**

கங்காளன் பூசும் சுவாசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ் வீரே யாமாகில்
தங்கா வினைகளும் சாகும் சிவகதி
சிங்காரமான திருவடி சேருவீரே

**விளக்கம்:** சிவபெருமான் உடம்பில் கவசமாய் பூசுவது திருநீறாகும். அப்படிப்பட்ட தெய்வீக திருநீற்றை அதன் ஒளி மங்காது குறையாது பூச வேண்டும். அப்படி நாம் சிவனை நினைத்து திருநீற்றை பூசிக் கொண்டால் நம்மை எந்த தீவினைகளும் வந்து சேராது. அழாகன சிவனின் திருவடியில் சேரலாம்.

**திரு நீறு தயாரிக்கும் முறை:**


அரசுடன் ஆல அத்தி ஆகும் அக்காரம்
விரவு கனலில் வியன் உருமாறி
நிரவயன் நின் மயன் தான்பெற்ற நீதர்
உருவம் பிரமம் உயர்குலம் ஆமெ.

**விளக்கம்:** அரச மரக் குச்சி, ஆலங்குச்சி, அத்தி மரக் குச்சி ஆகிய மூன்றையும் கலந்து யாகத் தீயில் போட வேண்டும். இவைகள் எரிந்து உருமாறிய சாம்பலே விபூதியாகும். இதை அணிபவர்களை உருவமில்லாத உயர் பொருள் சிவன் அருளைப் பெற்ற நீதி நெறி தவறாத மேலோர் கூட்டத்தில் சேர்க்கும் பிரம்ம நிலை பெற வைக்கும்.

**சிவ பெருமான் உருவம் எப்படி இருக்கும்**

பெண்ணைக் கடந்து இயங்கும் புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துள்ளிக் கிடந்த சுடுபொடி ஆடிக்குப்
பின்னிக் கிடந்தது என் பேரன்புந்தானே

**விளக்கம்:** பொன்னை விட ஒளி வீசக் கூடிய சிவப்பு நிறத்தை உடையவன். சிவந்த இடையில் புலித் தோலினை கட்டியவன். தலையில் மின்னக் கூடிய மின்னல் போன்று ஒளிந்து இருக்கக் கூடிய இளம்பிறையைக் கூடியவன். சுடுகாட்டுச் சாம்பலை விபூதியாக பூசியன் ஊழிக் கூத்து ஆடுபவரன் அண்டத்திலும் அணுவிலும் ஆடுபவன். அப்படிப்பட்ட ஈசனுடன் என்னுடைய பேரன்பு பின்னிக் கிடைக்கின்றது. ஈசனிடம் இருந்து என் அன்பை பிரிக்க முடியாது.



**சிவ பெருமான் புலித் தோல் விளக்கம்:**

புலித்தோல் – புள்ளித் தோல், புள்ளித் தோலே புலித்தோலாக மருவியது. சிவபெருமான் அண்டத்தையே புள்ளித் தோலாக அளிந்தவன்.

புலிக்கு உடம்பில் புள்ளி புள்ளியாக இருப்பதால் அது புள்ளி என்று அழைக்கப்பெற்றது. காலப் போக்கில் புள்ளியே புல்லியாக மருவியது. மான் இனத்தினஅ புள்ளி புள்ளியாக இருப்பதை புள்ளி மான் என்று அழைக்கின்றோம்.

நாம் இரவு நேரத்தில் அண்ட வெளி வானத்தைப் பார்த்தால் புள்ளி புள்ளியாக இருக்கும். பல கோடி அண்டங்களும் பலகோடி சூரிய நட்சத்திரங்களும் சேர்ந்து நமக்கு புள்ளி புள்ளியாக காட்சியளஇக்கும். இப்படிப்பட்ட அண்டத்தின் புள்ளியையே புள்ளித் தோலாக அணிந்தவர் சிவ பெருமான் ஆவார். சிவ பெருமான் பெரிய உருவமாக மாறும் போது அண்டத்தின் புள்ளித் தோலாகவும் சிவபெருமான் சிறிய உருவமாக எடுக்கும்போது பிண்டத்தில் புலித்தோல் அணிந்தவராக காட்சி கொடுக்கிறார்.

அது புலியைக் கொன்ற புலித் தோல் அல்ல. அண்டத்தின் புள்ளிகளையே ஆடையாக அணிந்த புலித் தோலாகும்.புலியைக் கொன்று புலித்தோல் ஒருபோதும் அணிவதில்லை. அந்த புள்ளித் தோல் அணிந்த ஈசனை முழுமனதுடன் வழிபடுவோம்.

**சிவ ஞானத் தத்துவங்கள்:**

சைவத் தத்துவத்தில் பசு பசு பாசமே முழுமையாகச் சொல்லப்படுகின்றது. உயிர், தளை, கட்டுதல் இவை மூன்றுமே அண்டம் பிண்டம் அனைத்திலும் இயங்குகின்றது. சிவ தத்துவத்தில் உயர் கூற்றுத் தத்துவங்கள் 96 ஆக அழைக்கப்படுகின்றது.
ஆன்மாக்களை சுற்றி 96 கருவிகளாகப் பிரிக்கப்படுகிறது.
அது, அகக்கருவி -36,
புறக்கருவி – 60 ஆக 96 கருவிகளாகும்.

**அருஞ் சைவ மெய் தத்துவங்கள் 96**

தச நாடிகள் 10, தச வாயுக்கள் 10, ராகங்கள் 8, தாதுக்கள் 7, ஆநாதரங்கள் 6, பஞ்ச கர்மேந்தியங்கள் 5, பஞ்ச ஞானேந்திரியங்கள் 5, பஞ்ச தன் மாத்திரைகள் 5, பஞ்ச அவத்தைகள் 5, பஞ்ச கோடிங்கள் 5, பஞ்ச பூதங்கள் 5, மும்மலங்கள் 3, மூவேடனைகள் 3, முப்பிணிகள் 3, முக்குணங்கள் 3, மூன்று மண்டலங்கள் 3, இரு வினைகள் 2, அந்த கரணங்கள் 4, ஆன்மா 1 ஆக மொத்தம் 96.

இனி விரிவாக பார்க்கலாம்..

**தச நாடிகள்:** 1.இடகலை, 2.பிங்கலை, 3.சுழுமுனை, 4.சிகுவை, 5.புருடன், 6.காந்தாரி, 7.அத்தி, 8.ஆலம்புடை, 9. சங்கினி, 10.குகு

**தச வாயுக்கள்:** 1. பிராணன், 2.அபாணன், 3.வியானன், 4.உதானன், 5.சமானன், 6.நாகன், 7. கூர்மன், 8.கிருகரன், 9.தேவதத்தன், 10.தனஞ்செயன்.

**ராகங்கள்:** 1. காமம், 2. குரோதம், 3.லோபம், 4.மோகம், 5.மதன், 6.மாச்சர்யம், 7. இடம்பம், 8.அகங்காரம்

**தாதுக்கள்:** 1. இரசம், 2.இரத்தம், 3. மாமிசம், 4.மேதஸ், 5. அஸ்தி, 6.மச்சை, 7.சுக்கிலம்- சுரோணிதம்.

**ஆதாரங்கள்:** 1.மூலாதாரம், 2.சுவாதிஷ்டானம், 3.மணிபூரகம், 4.அனாகதம், 5.விசுத்தி, 6.ஆக்ஞை

**பஞ்ச கர்மேந்திரியங்கள்:** 1.வாக்கு, 2.பாணி, 3. பாதம், 4.பாயுரு, 5.உபஸ்தம்

**பஞ்ச ஞானேந்திரியங்கள்:** 1.மெய், 2. வாய், 3.கண், 4.மூக்கு, 5.செவி

**பஞ்ச தன் மாத்திரைகள்:** 1. சுவை, 2.ஒளி, 3.ஊறு, 4.ஓசை, 5.நாற்றம்

**பஞ்ச அவத்தைகள்:** 1.விழிப்பு, 2.கனவு, 3.மயக்கம், 4.துரியம், 5.துரியாதீதம்

**பஞ்ச கோசங்கள்:** 1.அன்னமயக் கோசம், 2.பிராணமயக்கோசம், 3.மனோமயக் கோசம், 4. விஞ்ஞானமயக் கோசம், 4. ஆனந்தமயக் கோசம்

**பஞ்ச பூதங்கள்:** 1. நிலம், 2.நீர், 3.நெருப்பு, 4.காற்று, 5.ஆகாயம்

**மும்மலங்கள்:** 1. ஆணவம், 2.கன்மம், 3.மாயை

**மூவேடனை:** 1.தார ஏடனை, 2.புத்திர ஏடனை, 3.லோக ஏடனை

**மூவாசைகள்:** 1.மண்ணாசை, 2.பெண்ணாசை, 3.பொன்னாசை

**முப்பிணிகள்:** 1. வாதம், 2.பித்தம், 3.சிலேத்துமம்

**முக்குணங்கள்:** 1.ராஜஸம், 2.தமோகுணம், 3.சாத்வீகம்

**மும்மண்டலங்கள்:** 1. சூரிய மண்டலம், 2.சந்திரமண்டலம், 3. அக்னி மண்டலம்

**இரு வினைகள்:** 1.நல்வினை, 2.தீவினை

**அந்தகரணங்கள்:** 1. மனம், 2.புத்தி, 3.சித்தம், 4.ஆங்காரம்

**ஆன்மா:** உடலில் சூட்சமமாக மறைந்திருக்கும்.

ஆகமொத்தம் 96 கருவிகளாகும். நம் ஆன்மாவைச் சுற்றி இந்த தத்துவக் கருவிகள் அனைத்தும் இயங்குகின்றது.

அண்டம் முழுவதிலும் இதே 96 கருவிதான் இயங்குகிறது. நம் உடலாகிய பிண்டத்திலும் 96 கருவிகள் இயங்குகின்றது.

இந்த சிவ தத்துவத்தை தெரிந்து கொண்டு சிவ பக்தியோடு நாம் சிவனை வழிபட வேண்டும். சிவ பக்தியே முதன்மையாகும். சிவ பக்தி இல்லாமல் சிவ ஞானமும் இல்லை, சிவத் தத்துவமும் இல்லை. தம் மனதை சிவ நெறியில் செலுத்தி நம் ஆன்மாவை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்வோம்.

## நத்தத்தில் போக்சோ வழக்கில் கைது செய்யப்பட்ட 2 பேரில்

# ஒருவருக்கு 15 ஆண்டுகள் சிறை, ரூ.1,10,000 அபராதம் மற்றொருவருக்கு 8 ஆண்டுகள் சிறை, ரூ.60 ஆயிரம் அபராதம்

திண்டுக்கல், நத்தம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் கடந்த 2021-ம் ஆண்டு 15 வயது சிறுமியை பாலியல் தொந்தரவு செய்து அதனை மொபைல் போனில் பதிவு செய்து பணம் கேட்டு மிரட்டிய ஆண்டிஅம்பலம் (40), அவரது மனைவி சீரின்ஜெனத் (40) ஆகிய 2 பேரையும் நத்தம் போலீசார் போக்சோவில் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்நிலையில் இவ்வழக்கு திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்த நிலையில் இன்று நீதிபதி அவர்கள், ஆண்டிஅம்பலத்திற்கு 15 ஆண்டுகள் சிறை தண்டனை ரூ.1,10,000/- அபராதமும், அவரது மனைவி சீரின்ஜனத்திற்கு 8 ஆண்டுகள் சிறை தண்டனை ரூ.60,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

நிருபர்: குரு.சரவணன், திண்டுக்கல்





**இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ**
**வன்சொல் வழங்கு வது** *குறள் 99*

ஒருவன் இனியவாகச் சொல்லுஞ் சொற்கள் இன்பத்தைப் பயத்தலைக் காண்பான், அதற்கு மறுதலையாகிய வன்சொல்லை வழங்குவது எப் பயனை நோக்கியோ ?





# சாலையில் கிடந்த பணத்தை காவல் நிலையத்தில் ஒப்படைத்த ஆட்டோ ஓட்டுனருக்கு குவியும் பாராட்டுக்கள்

தென்காசி மாவட்டம், ஆழ்வார்குறிச்சி ஸ்டேட் பேங்க் அருகே ரப்பர் பேன்டால் சுருட்டி வைக்கப்பட்ட பணம் சாலையின் ஓரம் இருப்பதை கவனித்த அப்பகுதி ஆட்டோ ஓட்டுநர் திரு.செந்தில் முருகன் என்பவர் பணத்தை எடுத்து கண்ணியத்துடன் காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

சிறிது நேரம் கழித்து பணத்தை தவறவிட்ட பரும்பூரைச் சேர்ந்த ஈஸ்வர வேல் என்பவர் தனது பணத்தை ஸ்டேட் பேங்க் அருகே தொலைத்துவிட்டதாகவும் தயவு கூர்ந்து கண்டுபிடித்து தரும்படியும் ஆழ்வார்குறிச்சி காவல் காவல் நிலையத்திற்கு வந்தடைந்தார், இதுகுறித்து சார்பு ஆய்வாளர் திரு.ஜெயக்குமார் அவர்கள் விசாரணை மேற்கொண்டு மேற்படி சாலையின் தவறவிட்ட 5,600 ரூபாய் பணத்தை ஈஸ்வர வேலிடம் தகுந்த அறிவுரைகள் கூறி ஒப்படைக்கப்பட்டது.

சாலையில் கிடந்த பணத்தை உரிய முறையில் கண்ணியத்துடன் ஒப்படைத்த ஆழ்வார்குறிச்சியை சேர்ந்த சைலப்பன் என்பவரின் மகனான ஆட்டோ ஓட்டுநர் திரு.செந்தில் முருகன் என்பவரை சார்பு ஆய்வாளர் அவர்கள் பாராட்டி பொன்னாடை அணிவித்து கௌரவித்தார். ஆட்டோ ஓட்டுனர் செந்தில்முருகனின் இச்செயல் அப்பகுதி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வெகுவாக பாராட்டி வருகின்றனர்.

நிருபர்: ஆறுமுகசாமி, தென்காசி.



**வாயு முத்திரை:** **சுட்டு விரலின் நுனியைப் பெருவிரலின் அடியில் வைத்துச் சுட்டு விரலின் பின்புறத்தைப் பெரு விரலால் பூப்போல் அழுத்திப் பிடிக்கவும். மற்ற விரல்கள் நீட்டிக் கொண்டிருக்க வேண்டும். வாயு சம்பந்தமான நோய்கள் 10 நாட்களில் இம்முத்திரையைச் செய்ய அகலுகின்றன. அதிகப்படியான வாயு கலைகிறது. உடல் வலி குறைகிறது. கழுத்துவலி அகலும். சம்மணங்காலிட்டு தினமும் 10 நிமிடம் செய்க. (இரண்டு கைகளிலும் செய்க...)**



# விதி



பல ஆண்டுகளுக்கு முன் ஒரு புலவரின் மனைவி இறக்கும் தருவாயில் தன் கணவனை அருகே அழைத்தாளாம்... என்னவென்று கேட்டு, கலங்கிய கண்களோடு கணவன் அவள் பக்கத்தில் வர... மனைவி தயக்கத்துடன் இப்படிக் கேட்டாளாம்.

"என் உயிர் எப்போதோ என்னை விட்டுப் பிரிந்திருக்க வேண்டும்.. ஆனால்.. ஒரே ஒரு கேள்வி என் நெஞ்சுக் குழியில் நின்று கொண்டு , என் உயிர் இந்த உடலை விட்டுப் பிரியாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது.. அந்தக் கேள்வியை இதுவரை உங்களிடம் நான் கேட்டதில்லை... இப்போதாவது கேட்கலாமா..?"

புலவனான அந்தக் கணவன் , புரியாமல் அந்தப் புனிதவதியைப் பார்க்க... அந்த மனைவி கேட்டாளாம் "இதுவரை உங்களிடம் நான் கேட்காத அந்தக் கேள்விக்கு , இப்போதாவது பதில் எனக்குத் தெரிந்து விட்டால்... நிம்மதியாக கண்களை மூடுவேன்.. அந்த நிம்மதியான மரணத்தை எனக்குத் தருவீர்களா.?"

கணவன் மௌனமாக தலையசைத்து சம்மதம் தெரிவிக்க ...மனைவி தன் நெடுநாள் சந்தேகத்தை கேட்டு விட்டாளாம்.. "ஒவ்வொரு நாளும் நீங்கள் உணவு அருந்தும்போது ஒரு கொட்டாங்குச்சியில் தண்ணீரும், ஒரு ஊசியும் கொண்டு வரச் சொல்லி, அதைப் பக்கத்தில் வைத்துக் கொண்டுதான் சாப்பிடுவீர்கள்... அப்படித்தானே..?"

கணவன் இதற்கும் மௌனமாக தலையசைக்க,

மனைவி கேட்டாளாம் "இதுவரை அதற்கான காரணத்தை ஒருபோதும் நான் உங்களிடம் கேட்டதில்லை... காரணம்.. கணவன் சொன்னதற்கு மறுபேச்சு பேசி, நான் அறிந்ததில்லை... இப்போது என் வாழ்வின் இறுதி மூச்சில் இருக்கிறேன்...இப்போதாவது சொல்லுங்கள்.. அந்த கொட்டங்கச்சியும் , தண்ணீரும் எதற்காக..?"

இதைக் கேட்டுவிட்டு, இதற்கான பதிலை எதிர்பார்த்து அந்த மனைவி, புலவனான கணவன் முகத்தைப் புரியாமல் பார்த்திருக்க, அந்தக் கணவன் சொன்னாராம்.. "அது வேறொன்றும் இல்லை... பரிமாறும்போது தவறுதலாக சோற்றுப்பருக்கை கீழே சிந்திவிட்டால், அதை அந்த ஊசியில் குத்தி, கொட்டாங்குச்சியில் உள்ள தண்ணீரில் கழுவி மீண்டும் சோற்றில் கலந்து உண்ணத்தான் அந்தக் கொட்டங்கச்சி நீரும்..ஊசியும்.."

கணவன் பதில் சொல்லியும் மனைவியின் குழப்பம் தீரவில்லை... அவள் கேட்டாள்.. "ஆனால் ஒருபோதும் நீங்கள் அந்த ஊசியையும், கொட்டாங்கச்சியையும் பயன்படுத்தி நான் பார்த்ததே இல்லையே..?"

மனைவி இப்படிக் கேட்டதும்...குரல் உடைந்து போன கணவன்... குமுறும் அழுகையை அடக்கிக் கொண்டு சொன்னாராம். "உண்மைதான்... ஒரு நாளும் நான் அதைப் பயன்படுத்தவில்லை..

ஏனென்றால் ஒரு நாளும் நீ எனக்குப் பரிமாறும்போது, ஒரு சோற்றுப் பருக்கையைக் கூட சிந்தவே இல்லையே...."

கணவன் பதில் அறிந்த மனைவி.. புன்னகை செய்தாளாம். அவ்வளவுதான்... கண் மூடி விட்டாளாம்..

நெகிழ்ச்சியோடு நெடு நேரம் நின்ற கணவன் அந்தப் புலவன்... கண்ணீரோடு தன் அன்பு மனைவிக்காக உடனே ஒரு கவிதை எழுதினானாம்...

இதுநாள் வரை தன் வாழ்நாளில் அவன் எழுதியதெல்லாம் இரண்டு வரிப் பாடல்கள்... அதில் ஏழே ஏழு வார்த்தைகள்.. அவ்வளவுதான்.. அதுதான் அந்தப் புலவன் தன் பாட்டுக்கு ஏற்படுத்திக் கொண்ட பார்முலா.. விதி.

இப்போது.... தனது செய்யுள் விதியை தானே தளர்த்திக் கொண்ட அந்தப் புலவன் தன் வாழ்வில் முதன் முதலாக, நாலு வரிப் பாட்டு ஒன்றை எழுதினானாம்.

அந்த நாலு வரிப் பாடல்:

"அடியிற்கினியாளே அன்புடையாளே
படிசொல் தவறாத பாவாய்- அடிவருடி
பின்தூங்கி முன்னெழும்பும் பேதாய்-
இனிதா(அ)ய் என் தூங்கும் என்கண் இரவு"

ஆம்... இந்த நாலு வரிப் பாடலை எழுதிய அந்தப் புலவர் திருவள்ளுவர். கணவன் சொல் தட்டாத அந்த கள்ளமற்ற அன்பு மனைவி வாசுகி.

அந்தப் பாடலின் பொருள்: "அடியவனுக்கு இனியவளே! அன்புடையவளே! என் சொல்படி நடக்கத் தவறாத பெண்ணே! என் பாதங்களை வருடி தூங்கச் செய்தவளே! பின் தூங்கி முன் எழுபவளே! பேதையே! என் கண்கள் இனி எப்படித்தான் இரவில் தூங்கப் போகிறதோ!"

இன்னொரு வள்ளுவன் பிறக்கலாம்.. அதேபோல், இன்னொரு வாசுகியும் என்ற நம்பிக்கையோடு...

# ஆற்றில் குதித்து தற்கொலைக்கு முயன்ற பெண்ணை மீட்ட இன்ஸ்பெக்டர் மாரியப்பன்

## SP திரு.ஆல்பர்ட் ஜான் IPS அவர்கள் பாராட்டு

ஆற்றில் குதித்து தற்கொலைக்கு முயன்ற பெண்ணை ஆத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் திரு.மாரியப்பன் தனது உயிரை பொருட்படுத்தாமல் ஆற்றில் குதித்து பெண்ணை மீட்டு மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சைபெறசெய்தார். காவல் ஆய்வாளரின் வீரதீர செயலுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஆல்பர்ட் ஜான் IPS அவர்கள் பாராட்டு தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்டம் 65 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் (23.01.2025) ஆத்தூர் பாலத்தில் இருந்து தற்கொலைக்கு முயன்று ஆற்றில் குதித்துள்ளார். இதனை அறிந்த ஆத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் திரு. மாரியப்பன் அவர்கள் உடனடியாக தனது உயிரையும் பொருட்படுத்தாமல் பாலத்தில் கயிறு கட்டி அவரும் ஆற்றில் குதித்த பெண்மணியை பத்திரமாக மீட்டு மருத்துவமனையில் சேர்த்தார்.

தன் உயிரையும் பொருட்படுத்தாமல்காவல் ஆய்வாளரின் வீர தீர செயலுக்கு அப்பகுதி பொதுமக்கள் மற்றும் தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் SP திரு.ஆல்பர்ட் ஜான் IPS அவர்கள் வெகுவாக பாராட்டினார்.



மேலும், இந்த காவலர்களை டிஜிபி சங்கர் ஜிவால் IPS பாராட்டி வெகுமதி வழங்கினார் என்பது பாராட்டுக்குரியது.

நிருபர்: ராமசாமி, தூத்துக்குடி





# பிப்ரவரி மாத ராசி பலன் 2025

# பொன்னான வாய்ப்புகளால் 5 ராசிகளுக்கு வெற்றி மேல் வெற்றி

பிப்ரவரி மாதத்தில் சூரியன், செவ்வாய், புதன் பெயர்ச்சி என 4 முக்கிய கிரகப் பெயர்ச்சிகள் நடக்க உள்ளன. பண சேர்க்கை ஏற்படும். உங்கள் செயல்களுக்கு வெற்றிகள் உண்டாகும்

பிப் 4ம் தேதில் குரு பகவான் ரிஷப ராசியில் வக்ர நிவர்த்தி அடைந்து நேராக நகரத் தொடங்க உள்ளார். பிப் 11ம் தேதியில், புதன் கும்ப ராசிக்கு பெயர்ச்சி ஆகிறார். பிப் 12ம் தேதியில் சூரியன் கும்ப ராசிக்கு பெயர்ச்சி ஆகிறார். பிப் 24ம் தேதியில் செவ்வாய் மிதுன ராசியில் வக்ர நிவர்த்தி அடைந்து நேராக நகரத் தொடங்க உள்ளார். பிப் 27ம் தேதியில் புதன் மீன ராசியில் பெயர்ச்சி ஆகிறார். கும்பத்தில் சூரியன், புதன் மற்றும் சனியின் திரிகிரஹி யோகம் உருவாகிறது. இது சாதகமற்ற பலனைத் தரும். இருப்பினும் சிலருக்கு அதிர்ஷ்டமானதாக அமைய உள்ளது.

மேஷ ராசிக்கு இந்த பிப்ரவரி மாதத்தில் உங்கள் தொழிலில் வளர்ச்சி காண்பதற்கான சிறப்பான வாய்ப்புகள் அமையும். கல்விக்கான முயற்சியில் எதிர்பார்த்த நன்மை அடைவீர்கள். சிலருடன் கூட்டாக சேர்ந்து செய்யக்கூடிய வியாபாரத்தில் லாபம் பெறுவீர்கள். உங்கள் வேலை தொடர்பாக முன்னேற்றம் ஏற்படும். இந்த மாதத்தில் ஆன்மீகத்தில், சுபகாரியத்தில் மும்முரமாக ஈடுபடுவீர்கள். வெளிநாட்டு பயணம், விசா தொடர்பான விண்ணப்பங்கள் செய்ய சாதகமான நாள். போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களுக்கு வெற்றி கிடைக்கும். தொழில் வளர்ச்சி உண்டாகும்.

மிதுன ராசி சேர்ந்தவர்களுக்கு இந்த பிப்ரவரி மாதத்தில் தொழில், வியாபாரம் தொடர்பாக பெரிய அளவில் நன்மை அடைவீர்கள். திருமணம் தொடர்பான முயற்சியில் நல்ல செய்தி தேடி வரும். வாழ்க்கைத் துணையுடன் நேரத்தை செலவிட வாய்ப்பு கிடைக்கும். ஏதேனும் வழக்கு தொடர்பான விஷயத்தில் சாதகமான சூழல் ஏற்படும். வேலை மற்றும் வியாபாரம் தொடர்பாக முன்னேற வாய்ப்புகள் உண்டு.

கடக ராசி சேர்ந்தவர்களுக்கு பிப்ரவரி மாதத்தில் ஆரோக்கியத்தில் நன்மைகள் நிறைந்ததாக அமையும். மறைமுக எதிரிகளை வெற்றி பெறுவீர்கள். கடினமான சூழ்நிலையில் சிறப்பாக செயல்பட்டு முன்னேற்றம் அடைவீர்கள். உங்களின் புகழ் அதிகரிக்கும். வீடு, நிலம் வாங்கும் முயற்சியில் சாதக பலன் ஏற்படும். வணிகத்தில் பயணங்களால் பயனடைவீர்கள். எழுத்து, பத்திரிக்கைத் துறையில் எதிர்பார்த்ததை விட அதிக பணம் சம்பாதிப்பீர்கள். சேமிப்பதற்கான சூழ்நிலை அதிகரிக்கும்.

சிம்ம ராசி சேர்ந்தவர்களுக்கு பிப்ரவரி மாதத்தில் கவலை விலகும். உங்களின் புகழ், செல்வம் அதிகரிக்கும். பணியிடத்தில் சாதகமான சூழ்நிலையும், நல்ல செய்திகளும் கிடைக்கும். சொத்து தொடர்பாக இருந்த தடைகள் நீங்கும். வேலையில் பதவி உயர்வு, வியாபாரத்தில் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும்.

கும்ப ராசிக்கு இந்த மாதம் வரப்பிரசாதமாக அமையும். மூத்த சகோதரர்களுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். இதே வேலை அல்லது தொழில் தொடர்பாக நல்ல வாய்ப்புகள் உண்டாகும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். விளையாட்டுப் போட்டி, கல்வி தொடர்பாக சிறப்பான வெற்றி கிடைக்கும். குடும்பத்துடன் யாத்திரை செல்ல வாய்ப்பு உள்ளது. மன அமைதி ஏற்படும்.




**மேஷ ராசி அன்பர்களே,** இந்த மாதம் தொடக்கத்தில் நிறைய நல்ல விஷயங்கள் நடக்கும். பண வரவு சொல்லும்படி இருக்கும். தங்கள் அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். நண்பர்கள் உறவினர்கள் மத்தியில் உங்கள் மதிப்பும் மரியாதையும் உயரும். உடன் பிறப்பிடம் சுமூகமான உறவு இருக்கும். தாய் தந்தையின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். மனதில் ஒரு சில குழப்பங்கள் வந்து நீங்கும். புதிய வண்டி வாகன சேர்க்கை உண்டு. ஆடம்பர பொருள் சேர்க்கை உண்டு. உடல் ஆரோக்கியம் எந்த குறையும் இல்லாமல் இருக்கும். குடும்பத்தில் நிம்மதி நீடிக்கும். ஆடம்பர செலவுகள் அதிகம் ஏற்படும். கணவன் மனைவிக்கு இடையே சிறு சிறு பிரச்சனைகள் வந்து போகும். வெளியூர் பயணங்கள் அதிகம் மேற்கொள்வீர்கள். அலைச்சல்கள் அதிகம் ஏற்பட்டாலும் அதன் மூலம் நிறைய அனுபவம் கிடைக்கப் பெறுவீர்கள். வேலை செய்யும் இடத்தில் பதவி உயர்வு,சம்பள உயர்வு, இட மாற்றம் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான மன கவலைகள் அவ்வப்போது தோன்றி மறையும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியிடத்தில் வேலை பளு அதிகரிக்கும், தொந்தரவுகள் நிறையவே வரும்.

**வணங்க வேண்டியதெய்வம்: முருகன் வழிபாடு**

**ஸ்லோகம்: கந்த ஷஷ்டி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம்: வெள்ளிக்கிழமைதோறும் முருகனுக்கு விளக்கு ஏற்றுங்கள்**

**சந்திராஷ்டமம்: மாசி 8-ம் தேதி 20/02/2025 விழாயக்கிழமை அதிகாலை 5.14 மணி முதல் மாசி 10-ம் தேதி 22/02/2025 சனிக்கிழமை மாலை 3.22 மணி வரை**




**ரிஷப இராசி அன்பர்களே,** இந்த மாதம் எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் அனுகூலமான பலன்கள் உண்டாகும்.மேலும் இந்த மாதம் நிறைய நல்ல விஷயங்கள் நடக்க வாய்ப்புள்ளது. எதிர்பாராத நன்மைகளை நிச்சயம் எதிர்பார்க்கலாம். இது வரை தடைபட்டு வந்த காரியம் கைகூடும். செய்யும் எல்லா காரியங்களிலும் 100 சதம் வெற்றி கிட்டும். எதிர்பார்க்காத இடத்தில் இருந்து மகிழ்ச்சியான செய்திகள் உங்களை தேடி வரும். தாராள தனவரவுகளால் அனைத்து பூர்த்தியாகும். குடும்பத்தில் சுப காரியம் கைகூடி வரும். கணவன் மனைவியிடம் அன்பு பாசம் அதிகமாகும். படிப்படியாக குறையும். பல பெரிய மனிதர்களின் தொடர்பால் உங்கள் அந்தஸ்து கௌரவம் உயரும். உடல் ஆரோக்கிய விஷயத்தில் கவனம் செலுத்துவது அவசியம். வெளியூர் பயணம் சென்று வர அதிகமாக வாய்ப்புள்ளது. பிரயாணத்தால் ஆதாயம் கிடைக்கப் பெறுவீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி ஏற்பாடுகள் நடைபெறும். வண்டி வாகன சேர்க்கை ஏற்படும். எல்லா வசதி வாய்ப்புகளும் வந்து சேரும். வேலை இல்லாதவர்களுக்கு எதிர்பார்த்த படி நல்ல வேலை கிடைக்கும். பணியில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வுகள் கிடைக்கும். புதிய தொழில் துவங்குவது தொடர்பான ஆலோசனைகளை செய்வீர்கள்.

**வணங்க வேண்டியதெய்வம்: ஆண்டாள்**

**ஸ்லோகம்: செவ்வாய் காயத்திரி சொல்லுதல் (or) கேட்டல்**

**பரிகாரம்: வெள்ளிக்கிழமை அம்பாளுக்கு விளக்கு ஏற்றுதல்**

**சந்திராஷ்டமம்: மாசி 10-ம் தேதி 22/02/2025 சனிக்கிழமை மாலை 3.23 மணி முதல் மாசி 12-ம் தேதி 24/02/2025 திங்கள்கிழமை இரவு 11.10 மணி வரை**




**மிதுன இராசி அன்பர்களே,** இது வரை இருந்து வந்த மறைமுக எதிர்ப்புகள் முற்றிலும் மறையும். கடந்த மாதம் இருந்த பிரச்சனைகள் இந்த மாதம் காணாமல் போகும். உங்களுக்கு எதிராக செயல்பட்டவர்கள் கூட உங்களிடம் வந்து சரணடைவார்கள். புதிய முயற்சிகளில் ஈடுபட்டு முன்னேற்றம் காண்பீர்கள். வரவேண்டிய பணம் கைக்கு வந்து சேரும். மனக்கவலை மறந்து மகிழ்ச்சியில் இருப்பீர்கள். எந்த ஒரு காரியத்திலும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செயல்படுவது நல்லது. உற்றார் உறவினர்களிடம் மரியாதையுடன் நடந்து கொள்வீர்கள். வெளியூர் பயணங்கள் அதிகம் மேற்கொள்ள வேண்டியிருக்கும். உடல் ஆரோக்கியம் எப்போதும் போல் இருக்கும். இருப்பினும் உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். நெருங்கிய உறவினர்களின் ஆதரவுகள் மகிழ்ச்சி அளிப்பதாக அமையும். மனதில் குழப்ப நிலை நீடிக்கும். குடும்பத்தில் அனைவரின் தேவைகளையும் நிறைவேற்று வீர்கள். உள்ளத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களுக்கு கொடுக்க பட்ட வேலைகளை சிறப்பாக செய்து மேலதிகாரிகளின் ஆதரவே பெறுவர். பணியில் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். தொழில் வகையில் முன்னேற்றங்கள் ஏற்பட்டாலும் சிறு சிறு தடங்கல்களும் வரும்.

**வணங்க வேண்டியதெய்வம் : பைரவரை செவ்வாய்க்கிழமை வழிபாட நன்மை.**

**ஸ்லோகம்: பைரவர் அஷ்ட்டகம்**

**பரிகாரம் : ஞாயிற்றுக்கிழமை பைரவருக்கு விளக்கு ஏற்றுதல்**

**சந்திராஷ்டமம்: மாசி 12-ம் தேதி 24/02/2025 திங்கள்கிழமை இரவு 11.11 மணி முதல் மாசி 15ம் தேதி 27/02/2025 வியாழக்கிழமை அதிகாலை 4.35 மணி வரை**




**கடக இராசி அன்பர்களே,** இந்த மாதம் நீங்கள் எதிர்பார்த்தது ஒன்றும் நடந்தது ஒன்றுமாக இருக்கும். நீங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் இடத்தில் இருந்து நல்ல செய்தி வரும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் வெற்றிபெறும் வர வேண்டிய பணம் சரியான நேரத்தில் கைக்கு வரும். நீண்ட நாள் எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். புதியதாக தொழில் துவங்க நிறைய வாய்ப்புள்ளது. வீட்டில் ஏதேனும் சுப நிகழ்ச்சி நடைபெறும். அடிக்கடி வெளியூர் பிரயாணம் மேற்கொள்ள வேண்டி வரும். முக்கியமாக குடும்பத்துடன் பல புண்ணிய தலங்களுக்கு சென்று வருவீர்கள். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உடலில் சிறு சிறு பாதிப்புகள் தோன்றினாலும் பெரிய மருத்துவ செலவுகள் ஏற்படாது. ஆடம்பர செலவுகளை குறைத்து கொள்வது நல்லது. உற்றார் உறவினர்களிடம் சிறு சிறு வாக்குவாதங்கள் உண்டாகும். உங்கள் பேச்சில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. கொடுக்கல் வாங்கல் போன்றவற்றில் பெரிய முதலீடுகளைத் தவிர்க்கவும். தேவையற்ற பயணங்களை தவிர்பது நல்லதல்ல. முக்கிய இடத்தில் இருந்து வரவேண்டிய நல்ல செய்திகள் உங்களை சந்தோஷப்படுத்தும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம் உண்டாகும். தொழில், வியாபாரம் போன்றவற்றில் எதிர்பார்த்த லாபத்தை அடைய நிறைய போராட வேண்டியிருக்கும்.

**வணங்க வேண்டியதெய்வம்: பெருமாள் வழிபாடு உங்களுக்கு நன்மையை தரும்.**

**ஸ்லோகம்: புதன் காயத்திரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது பரிகாரம்: புதன்கிழமை தோறும் பெருமாளுக்கு விளக்கு ஏற்ற வேண்டும்**

**சந்திராஷ்டமம்: மாசி 15-ம் தேதி 27/02/2025 வியாழக்கிழமை அதிகாலை 4.36 மணி முதல் மாசி 17-ம் தேதி 1/03/2025 சனிக்கிழமை காலை 8.05 மணி வரை**




**சிம்ம இராசி அன்பர்களே,** இந்த மாதம் எதிர்பாராத பல திருப்பங்கள் உள்ளன. வழக்கு விவகாரங்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டி இருக்கும். வர வேண்டிய பண கூட சற்று தாமதித்து பின் வரும். உடன் பிறப்பால் ஒரு சில பிரச்சனைகள் வெளி. வாகனங்களில் செல்லும் போது கவனமாக இருக்கவும். உடல் ஆரோக்கியத்தில் சிறு சிறு பிரச்சனைகள் மறையும். சற்றும் எதிர்பாராத கடன் ஏற்படும். கடன் பிரச்சனை மனம் பாதிக்கும்.

உணவு விஷயத்தில் கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது. எடுக்கும் காரியங்களில் வெற்றி கிட்டும். பண வரவு தாராளமாக இருக்கும். கணவன் மனைவியிடையே ஒற்றுமை சிறப்பாகவே இருக்கும். குடும்பத்தில் திடீர் செலவு ஏற்படும். உற்றார் உறவினர்கள் அனுகூலமாக செயல்படுவார்கள். வீட்டில் ஆடை ஆபரணங்கள் வாங்கி சேர்ப்பீர்கள். பணம் கொடுக்கல் வாங்கலில் பெரிய தொகையை ஈடுபடுத்தி லாபம் காண முடியும். பல பெரிய மனிதர்களின் உதவியும் ஆதரவும் தடையின்றி கிடைக்கும். தொழில் வியாபாரம் திருப்தி தரும். நல்ல முன்னேற்றம் ஏற்படும். பணியிடங்களில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**வணங்க வேண்டியதெய்வம்: குருபகவான் வழிபாடு உங்களுக்கு நன்மையை தரும்**

**ஸ்லோகம்: குரு காயத்திரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம்: வியாழக்கிழமை தோறும் குருவுக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.**

**சந்திராஷ்டமம்: மாசி 17-ம் தேதி 01/03/2025 சனிக்கிழமை காலை 8.06 மணி முதல் மாசி 19-ம் தேதி 03/03/2025 திங்கள்கிழமை காலை 10.37 மணி வரை.**




**கன்னி இராசி அன்பர்களே,** இந்த மாதம் எந்த காரியத்தை செய்தாலும் பல முறை யோசித்து செய்வது உத்தமம். உங்கள் நம்பிக்கைக்கு உரியவர்களிடம் ஆலோசனை கேட்பது பல வகையில் உதவியாக இருக்கும். உடன் பிறப்புகளுடன் வீண் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். சிறு உடல் உபாதைகள் வந்து போகும். மனக்குழப்பம் தோன்றி மறையும்.

பெரிய மனிதர்களின் அறிமுகம் கிடைக்கும். பூர்வீக சொத்து கைக்கு வரும். குடும்பத்தில் உள்ளவர்களுடன் விட்டு கொடுத்து நடந்து கொண்டால் மனநிம்மதி இருக்கும். பண வரவுகளில் ஏற்ற இறக்கமான நிலையிருந்தாலும் தேவைகளை பூர்த்தி செய்து விட முடியும். கொடுக்கல் வாங்கலில் கவனத்துடன் செயல்படுவது நல்லது. உங்கள் விரோதிகளும் நண்பர்களாக மாறி உதவி செய்வர். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். வாழ்க்கை துணையுடன் கலந்து ஆலோசிப்பது நல்லது.ஒரு சிலருக்கு புதிய தொழில் தொடங்க வாய்ப்புகள் கிடைக்கும். பணியிடத்தில் பதவி உயர்வும் நல்ல மரியாதையும் கிடைக்கும்.

**வணங்க வேண்டியதெய்வம்: பெருமாள் வழிபாடு உங்களுக்கு நன்மையை செய்யும்.**

**ஸ்லோகம்: புதன் காயத்திரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம்: புதன்கிழமை தோறும் பெருமாளுக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.**

**சந்திராஷ்ட்டமம்: மாசி 19-ம் தேதி 03/03/2025 திங்கள்கிழமை காலை 10.38 மணி முதல் மாசி 21-ம் தேதி 05/03/2025 புதன்கிழமை பகல் 1.00 மணி வரை.**




**துலாம் இராசி அன்பர்களே,** இந்த மாதம் புது புது சம்பவங்கள் நடக்கலாம். பணம் தொடர்பான விஷயங்களில் சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பேச்சில் நிதானம் அவசியம் தேவை. புதிய வீடு வாங்கும் முயற்சிகள் தாமதமாகும். சகோதரர்கள் மூலம் பண உதவி கிடைக்கும். ஆன்மிக பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். எதிர்பார்த்த இடத்தில இருந்து நல்ல செய்திகள் வரும். வாழ்க்கைத்துணையின் பெயரில் புதிய முயற்சிகள் தொடங்கும் வாய்ப்பு வரும்.

உடல் ஆரோக்கியத்தில் உஷ்ணம் சம்பந்தமான தொந்தரவுகள் வரலாம். மருத்துவ செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு. கணவன் மனைவி இருவரும் வீண் வாக்குவாதங்களை தவிர்க்கவும். மனைவி வழி சொந்தங்களால் அனுகூலமான பலன்கள் கிடைக்கப் பெறுவீர்கள். பணவரவுகள் ஏற்ற இறக்கமாக இருக்கும், முடிந்த வரை தேவையற்ற செலவுகளை குறைப்பது நல்லது. உற்றார் நல்லது உறவினர்களை அனுசரித்து செல்வது. அடிக்கடி வெளியூர் பயணங்கள் செல்லும் வாய்ப்பு உண்டாகும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சனைகள் வந்து போகும். திருமணம் சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் சில தடங்கலுக்கு பின் அனுகூலம் உண்டாகும். கிடைக்கும்.பணியிடங்களில் கூடுதல் உழைப்பு, பல தடங்கல்கள் சந்திக்க வேண்டி இருக்கும்.

**வணங்க வேண்டியதெய்வம்: கணபதி வழிபாடு உங்களுக்கு நன்மையை செய்யும்.**

**ஸ்லோகம்: கணபதி காயத்திரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம்: ஞாயிற்றுக்கிழமை தோறும் கணபதிக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.**

**சந்திராஷ்ட்டமம்: தை 24-ம் தேதி 06/02/2025 வியாழக்கிழமை அதிகாலை 4.58 மணி முதல் தை 26-ம் தேதி 08/02/2025 சனிக்கிழமை காலை 8.13மணிவரை**




**விருச்சிக இராசி அன்பர்களே,** இந்த மாதம் மன பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கும். எந்த விஷயத்திலும் அவசரம் காட்ட வேண்டாம். முன் கோபத்தையும், சிறு சிறு விஷயங்களுக்காக உணர்ச்சிவசப்படுவதையும் தவிர்க்கவும். வீட்டை புதிப்பிக்கவோ, வீடு மாற்றி செல்லவோ வாய்ப்பு வரும். பல பிரச்சனைக்கு நடுவே பணம் தங்கள் கைக்கு வந்து சேரும்.

பண வரவுகள் சிறப்பாக இருப்பதால் குடும்பத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். உங்கள் வாழ்க்கை தரம் உயரும். கணவன் மனைவிக்குள் நல்ல புரிதல் இருக்கும். தேவையற்ற பயணங்களை தவிர்ப்பதால் அலைச்சல்களை குறைக்க முடியும். உறவினர்களால் சாதகமான பழங்கள் கிடைக்கும். கடன் வாங்கும் என்னத்தை கை விடுவது நல்லது. புதிய வண்டி வாகன சேர்க்கை உண்டு. உடல் நலம் தொடர்பாக மருத்துவ செலவு. பயணம் மூலம் லாபம் கிடைக்கும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

உறவினர் வருகை அதிகம் உண்டு. கணவன் மனைவி நெருக்கம் அதிகம் ஆகும். புதிய தொழில் தொடங்கவும், வியாபாரத்தில் இடையூறுகள் நீங்கவும் வழி ஏற்படும். உத்யோகஸ்தர்கள் பணியில் எதிர்பார்க்கும் உயர்வுகள் பெறமுடியும்.

**வணங்க வேண்டியதெய்வம்: பெருமாளை வழிபாடு உங்களுக்கு நன்மையை செய்யும்.**

**ஸ்லோகம்: புதன் காயத்திரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம்: புதன்கிழமை தோறும் பெருமாளுக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.**

**சந்திராஷ்டமம்: தை 26-ம் தேதி 06/02/2025 சனிக்கிழமை காலை 8.14 மணி முதல் தை28-ம் தேதி 10/02/2025 திங்கள்கிழமை பகல் 1.14மணி வரை**




**தனுசு இராசி அன்பர்களே,** உடல் நலத்தில் நல்ல முன்னேற்றம் இருக்கும். வரவுக்கு ஏற்ற செலவுகளும் காத்து கொண்டு இருக்கும். பயணங்கள் போன்றவற்றில் எதிர்பார்த்ததை விட அதிக செலவுகள் செய்ய வேண்டி வரும். முக்கிய முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றங்கள் வரும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கப் பெறுவீர்கள். புதிய வண்டி வாகன சேர்க்கை உண்டு. பல பிரச்சனைகளை சந்தித்து உங்களுக்கு புதிய திருப்புமுனை உண்டாகும். கொடுக்கல் வாங்கலில் திருப்திகரமான சூழல் ஏற்படும். உறவினர்களின் பரிபூர்ண ஆதரவு கிடைக்கும்.

வெளியூர் பயணங்கள் சிறப்பாக அமையும். பணம் சேமிக்க வேண்டும் என்ற எண்ணம் வரும். உங்கள் அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். குடும்பத்தில் சுப விரயங்களும் வீண் விரயங்களும் உண்டு. குடும்ப சுமைகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். அதிகாரிகளின் ஆதரவு கிடைப்பதில் சிரமம் ஏற்படும்.

தொழில் வகையில் மந்த நிலை இருக்கும். பெரிய லாபத்தை எதுவும் இப்போதைக்கு எதிர்பார்க்க முடியாது. எதிர்பார்க்கும் வருமானம் கிடைக்காமல் போகலாம்.

**வணங்க வேண்டியதெய்வம்: வியாழக்கிழமை தோறும் தட்சிணாமூர்த்தியை வழிபாடு உங்களுக்கு நன்மையை செய்யும்.**

**ஸ்லோகம்: சுக்கிர காயத்திரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம்: வெள்ளிக்கிழமை தோறும் அம்பாளுக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.**

**சந்திராஷ்டமம்: தை 28-ம் தேதி 10/02/2025 திங்கள்கிழமை பகல் 1.15 மணி முதல் 30-ம் தேதி 12/02/2025 புதன்கிழமை இரவு 8.32 மணி வரை.**




***மகர ராசி அன்பர்களே,*** *உங்களுக்கு கிடைக்க வேண்டிய ஆதாயத்தை நீங்கள் உறுதியாக எதிர்பார்க்கலாம். இதுவரை சந்தித்த பிரச்சனைகள் மனக்கவலைகள் யாவும் விலகும். பொருளாதார சிக்கல்கள் மனசங்கடங்கள் யாவும் விலகும். உடல் ஆரோக்கியம் சீர் பெரும்.*

*குடும்பத்தில் சந்தோசம் உண்டாக கூடிய சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். மனதில் சந்தோஷமும் நிம்மதியும் உண்டாகும். குறிப்பாக பொருளாதார பிரச்சனைகள் இருக்காது. உடன் பிறந்தோரின் ஆதரவை எதிர்பார்க்கலாம். வாழ்க்கை துணையின் மூலம் ஆதாயம் உண்டு.*

*ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். மனதில் புதிய தெம்பும் தைரியமும் உண்டாகும். மனைவி வழி சொந்தங்களினால் அனுகூலமான பலனை பெறுவீர்கள். பழைய கடன் பிரச்சனை தீர புதிய வழி ஒன்று கிடைக்கும். குடும்பத்துடன் புண்ணிய தலங்களுக்கு சென்று வருவீர்கள். செல்வ நிலை உயரும். உத்யோகம் பார்க்கும் இடத்தில் சக ஊழியர்களின் ஆதரவு இருக்கும். தொழில் துவங்கும் யோகங்களும் வந்து சேரும்.*

*வணங்க வேண்டியதெய்வம்: ஞாயிற்று கிழமை தோறும் பைரவர்மூர்த்தியை வழிபாடு உங்களுக்கு நன்மையை செய்யும்.*

*ஸ்லோகம்: பைரவர் காயத்திரி சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.*

*பரிகாரம்: சனிகிழமை தோறும் பைரவருக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.*

*சந்திராஷ்டமம்: தை 30-ம் தேதி 12/02/2025 புதன்கிழமை இரவு 8.33 மணி முதல் மாசி 3ம் தேதி 15/02/2025 சனிக்கிழமை அதிகாலை 6.13 மணி வரை.*




***கும்ப ராசி அன்பர்களே,*** *நீங்கும் புது முயற்சியில் சில தடைகள் ஏற்பட்டு பின் சீராகும். குடும்ப ஒற்றுமை சிறப்பாக இருக்கும். உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் எடுத்துக்கொண்டால் அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்புடன் செயல்பட முடியும். உற்றார் உறவினர்களை அனுசரித்து செல்ல வேண்டியிருக்கும். பணவரவுகள் ஓரளவுக்கு சிறப்பாக அமையும்.*

*பணம் கொடுக்கல் வாங்கலில் ஏற்ற இறக்கமான நிலையிருந்தாலும் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றிவிட முடியும். சிலருக்கு பெண்களால் நன்மைகளை எதிர்பார்க்கலாம். பல நேரங்களில் மௌனம் சாதிப்பது இப்போதைக்கு நல்லது. தேவையில்லாத காரியங்களில் தலையிட்டு சிக்கலில் சிக்கி கொள்ள வேண்டாம். கிரக நிலைகளில் பாதிப்புகளை ஆரம்பத்தில் சந்தித்தாலும் மாத இறுதியில் நன்மைகளை எதிர்பார்க்கலாம். உத்யோகஸ்தர்களுக்கு பணியில் கௌரமான பதவி மற்றும் ஊதிய உயர்வுகள் கிடைக்கும்.*

*மேலும் உங்கள் திறமைக்கேற்ற பாராட்டுகளும் கிடைக்கப் பெறுவதால் மனமகிழ்ச்சி உண்டாகும். தொழில், வியாபாரமும் சிறந்த முறையில் நடைபெற்று வரும் லாபம் உண்டாகும். தொழிலில் முன்னேற்றம் இருக்கும்.*

***வணங்க வேண்டியதெய்வம்:***

***சனிஸ்வரரை வழிபாடு உங்களுக்கு நன்மையை செய்யும்.***

***ஸ்லோகம்:***

***சனிஸ்வரார் அஷ்ட்டகம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.***

***பரிகாரம்:***

***சனிக்கிழமை தோறும் சனிஸ்வரருக் நெய் தீபம் ஏற்ற வேண்டும்.***

***சந்திராஷ்டமம் தினம்: மாசி 3-ம் தேதி 15/02/2025 சனிக்கிழமை அதிகாலை 6.14 மணி முதல் மாசி மாதம் 5-ம் தேதி 17/02/2025 திங்கள்கிழமை மாலை 5.38 மணி வரை.***




***மீன ராசி அன்பர்களே,*** *இந்த மாதம் மன பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். எந்த விஷயத்திலும் அவசரம் காட்ட வேண்டாம். முன் கோபத்தையும், சிறு சிறு விஷயங்களுக்காக உணர்ச்சிவசப்படுவதையும் தவிர்க்கவும். வீட்டை புதிப்பிக்கவோ, வீடு மாற்றி செல்லவோ வாய்ப்பு வரும். பல பிரச்சனைக்கு நடுவே பணம் தங்கள் கைக்கு வந்து சேரும். பண வரவுகள் சிறப்பாக இருப்பதால் குடும்பத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும்.*

*உங்கள் வாழ்க்கை தரம் உயரும். கணவன் மனைவிக்குள் நல்ல புரிதல் இருக்கும். தேவையற்ற பயணங்களை தவிர்ப்பதால் அலைச்சல்களை குறைக்க முடியும். உறவினர்களால் சாதகமான பழங்கள் கிடைக்கும். கடன் வாங்கும் என்னத்தை கை விடுவது நல்லது. புதிய வண்டி வாகன சேர்க்கை உண்டு. உடல் நலம் தொடர்பாக மருத்துவ செலவு. பயணம் மூலம் லாபம் கிடைக்கும். புதிய நபர்களின் நட்பு கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.*

*உறவினர் வருகை அதிகம் உண்டு. கணவன் மனைவி நெருக்கம் அதிகம் ஆகும். புதிய தொழில் தொடங்கவும், வியாபாரத்தில் இடையூறுகள் நீங்கவும் வழி ஏற்படும். உத்யோகஸ்தர்கள் பணியில் எதிர்பார்க்கும் உயர்வுகள் பெறமுடியும்.*

***வணங்க வேண்டியதெய்வம்:***

***சிவ பெருமானை வழிபாடு நன்மையை தரும்***

***ஸ்லோகம்: வில்வாஷ்டகம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.***

***பரிகாரம்: திங்கள்கிழமை தோறும் சூரியபகவானுக்கு நெய் தீபம் ஏற்ற வேண்டும்.***

***சந்திராஷ்டமம்: மாசி 5-ம் தேதி 17/02/2025 திங்கள்கிழமை மாலை 5.39 மணி முதல் மாசி மாதம் 8-ம் தேதி 20/02/2025 வியாழக்கிழமை அதிகாலை 5.13 மணி வரை.***



### கரூர் மாவட்ட காவல்துறையில்

# சிறப்பாக பணியாற்றியவர்களை பாராட்டிய SP K.பைரோஸ்கான் அப்துல்லா IPS

கரூர் மாவட்ட ஆயுதப் படையில் கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.K.பெரோஸ்கான் அப்துல்லா IPS அவர்களின் உத்தரவின் பேரில் கவாத்து பயிற்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் கலந்துகொண்டு கவாத்து நிகழ்ச்சியை நேரில் சென்று பார்வையிட்டார். அப்போது காவலர்களின் நிறைகுறைகளை கேட்டறிந்தார்.

மேலும் 76-வது குடியரசு தின விழாவில் கவாத்து அணிவகுப்புபில் கலந்து கொண்ட ஆயுதப்படை காவல் ஆய்வாளர், உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்களுக்கு கரூர் மாவட்ட காவல் கண்காணிப் பாளர் திரு.K.பெரோஸ்கான் அப்துல்லா IPS அவர்கள் பாராட்டு சான்றிதழ் மற்றும் வாழ்த்துகளை தெரிவித்தார்.

நிருபர்: N.நபிமுகமது, கரூர்














### அரும்பாக்கம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில்

# சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி

அரும்பாக்கம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இதில் தலைமையாசிரியை மரியாதைக்குரிய முனைவர் இரா.சி.ஸ்ரீ பிரியா அவர்கள் தலைமை தாங்கினார். சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியில் செல்போன் பயன்படுத்தாதீர் மற்றும் தலைகவசம் அணிவீர் போன்ற பதாகைகளை ஏந்தி மாணவ மாணவிகள் பேரணி சென்றனர். இது பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

நிருபர்: முகமதுமீரான், சென்னை.

# வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம் பிள்ளை

5 செப்டம்பர் 1872 – 18 நவம்பர் 1936

**வஉசிக்கு இணையான ஒரு தியாகியோ, போர்க்குணமுள்ள ஒரு தலைவரோ இந்திய அரசியலிலேயே கிடையாது.**



உலகிலேயே 40 வருஷம் சிறை தண்டனை விதிக்கப்பட்ட ஒரே தலைவர் வ.உ.சிதம்பரம்..!

அதிலும் கோவை சிறைதான், வஉசிக்குள் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது..!

அந்த ஜெயிலர் பெயர் மிஞ்ஜேல்... ரொம்ப மோசமானவன். கொடூரக்காரன்..!

ஜெயிலுக்குள் கொண்டு செல்லும்போதே, கை, கால்களை கட்டி தெருவெல்லாம் இழுத்து சென்றுள்ளனர்..!

வஉசிக்கு சிறைக்குள் தனி ரூம். ஆனால் அதில் காற்று வசதி இல்லை. சுத்தமும் சுகாதாரமும் இல்லை. கால்களில் விலங்கு பூட்டப்பட்டுதான் வஉசியை அடைத்து வைத்தனர்..!

ஜெயிலுக்குள் சென்றதுமே தலையை மொட்டை அடித்திருக்கிறார்கள். ஒரே ஒரு டிரஸ் தந்திருக்கிறார்கள், அதுகூட சாக்குப் பையால் தைத்தது.

ஒருநாளைக்கு ஆயிரம் பேருக்கு சாப்பாடு போட்டவருக்கு, ஜெயிலில் கூழ் தந்தார்கள். அதுவும் புளித்து போயிருந்தது. சில சமயம் அந்த கூழில் புழுக்கள் மிதக்குமாம்..!

உடல்நிலை மோசமானதால், ஒருநாள் மட்டும் அரசி சோறு கேட்டாராம் வஉசி. அதற்காக 3 நாளைக்கு, அந்த கூழை கூட தராமல் பட்டினி போட்டுள்ளான் அந்த ஜெயிலர் மிஞ்ஜேல்.

சணல் கிழிக்கும் மிஷினை கையாலேயே சுற்ற வேண்டும். இதுதான் வஉசிக்கு தரப்பட்ட முதல் வேலை. அப்படி செய்ததால், வஉசியின் கைகளில் உள்ள தோல் கிழிந்து ரத்தம் கொட்டி உள்ளது. அதை பார்த்து ஒரு கைதி, மனசு கேட்காமல் ஓடிவந்து மிஷின் சுற்றுவதை தடுத்துள்ளார்.

ஆனால் அந்த கைதியை அடித்து நொறுக்கினான் மிஞ்ஜேல்... பிறகு, கையால் செய்யும் வேலைகளை தராமல், செக்கிழுக்கும் வேலையை தந்துள்ளனர். அதாவது மாட்டுக்கு பதில் வஉசியை பூட்டினர். அதுவும் உச்சிவெயிலில். இதில் மயங்கி கீழே விழுந்துவிட்டால், சவுக்காலேயே அடிப்பார்கள்..!

வஉசியின் மதிப்பு தெரிந்த கைதி ஒருவர், தன்னுடைய தலைக்கு மேல் 2 கைகளையும் கூப்பி “வணக்கம் ஐயா” என்றார். அவ்வளவுதான், ஜெயிலுக்குள் கலவரம் வெடித்து, ஒரு கைதி துப்பாக்கி சூட்டில் இறக்குமளவுக்கு பிரச்சனை செய்துவிட்டான் அந்த ஜெயிலர்.

வ.உ.சி விடுதலை செய்யப்பட்டும் தன்னுடைய வக்கீல் பணியை தொடர முடியாத அளவுக்கு லைசென்ஸ் பிடுங்கிவிட்டனர். ஒரு அரிசி கடையில் வேலை பார்த்தார். நாள் முழுக்க வேலை பார்த்துவிட்டு, 4 ஆழாக்கு அரிசியோடு வீட்டுக்கு போவாராம். இந்த விஷயம் தெரிந்த அந்த மளிகைக் கடைக்கு சீல் வைத்து விட்டனர் பிரிட்டிஷ் அதிகாரிகள்..!

அரை வயிற்று கஞ்சிக்குகூட கஷ்டப்படும் நிலை வந்ததால்தான், தலையில் மண்ணெண்ணெய் சுமந்து விற்றுள்ளார்...!

இதைவிட கொடுமை, தன்னுடைய வக்கீல் உரிமத்தை மீட்டெடுக்க கோர்ட்டில் வாதாடி உதவ வேண்டும் என்று வ.உ.சி கேட்டதற்கு, மூத்த வக்கீலான மூதறிஞர் ராஜாஜி மறுத்துவிட்டாராம்.

சில சமயம் காந்தியை விட்டுத்தராமலும், சில சமயம் காந்தியின் கொள்கைகளை ஏற்க முடியாமலும் எதிர்த்துள்ளார் வ.உ.சி..!

வ.உ.சி குடும்பம் வறுமையில் உள்ளதை கேள்விப்பட்டு, தென் ஆப்பிரிக்காவில் உள்ள தமிழர்கள், 5,000 ரூபாய் நிதி திரட்டி காந்தியிடம் தந்திருக்கிறார்கள்.

"எப்படியாவது வ.உ.சியிடம் இந்த பணத்தை சேர்த்துவிடுங்கள்" என்றும் சொல்லி உள்ளனர். லெட்டர் மேல் லெட்டர் போட்டும் காந்திக்கு ஞாபகப்படுத்தி கொண்டே இருந்தனர்..!

ஆனால் அந்த பணத்தை காந்தி, வ.உ.சிக்கு தரவே இல்லையாம். "காந்தி கணக்கு" என்று நாம் சொல்கிறோமே. அது இதுதான்! (திலகர், இந்த விஷயத்தில் தலையிட்டு பஞ்சாயத்து செய்து, அந்த பணத்தை வ.உ.சிக்கு பெற்று தந்தது தனி கதை)

வ.உ.சிக்கு இணையான ஒரு தியாகியோ, போர்க்குணமுள்ள ஒரு தலைவரோ இந்திய அரசியலிலேயே கிடையாது. ஆனாலும் சொந்த கட்சியில் உரிய மரியாதையை, அவர் இறந்தும்கூட தராதது வருந்தத்தக்கது. சில வழக்குகளை எதிர் கொள்வதற்கும் கூட அவருக்கு காங்கிரஸ் உதவவில்லை என்பது கசப்பான உண்மை..!

உண்மையை சொல்வதானால், பிரிட்டிஷ் அரசின் ஒடுக்குமுறைக்கு ஆளாகி சீரழிந்ததைவிட, சொந்த கட்சியின் துரோகத்தால்தான் அதிகம் துவண்டுபோனார் வ.உ.சி..!

பல்லாண்டு காலமாய் அடிமைப்படுத்தியிருந்த வெள்ளையர்களுக்கு எதிராகக் கப்பல் விட்ட பெருமை இந்தியாவிலேயே தமிழன் வ.உ.சிக்குதான் உண்டு..!

இந்த தேசத்தின் தலைவராக உயர்ந்திருக்க கூடியவர் வ.உ.சி.. ஆனால், வ.உ.சியின் வரலாற்றை மறைத்துவிட்டு வாஞ்சிநாதனை பிரதானப்படுத்த காரணம் என்ன?

1806-ல் வேலூர் புரட்சியை அலட்சியப்படுத்திவிட்டு, 1857-ல் வந்த சிப்பாய் கலகத்தை பெரிதுபடுத்த காரணம் என்ன?

ஒன்று மட்டும் விளங்குகிறது. எப்பேர்ப்பட்ட தியாகத்தையே செய்திருந்தாலும், அதை தீர்மானிப்பது இந்திய அரசியலின் "சாதி" தான்..!

இனியாவது "வ.உ.சி கப்பல் ஓட்டினார், செக்கிழுத்தார்" என்பதை மட்டுமே சொல்லி சுருக்கிவிடாமல், அவருடைய சமூக நீதி கொள்கையை மக்களிடையே, இன்றைய இளைஞர்கள் அழுத்தமாக பரப்ப செய்ய வேண்டும்..!

தமிழர்களை மட்டுப்படுத்தவும், ஏளனப்படுத்தவும், யாருக்குமே தகுதி கிடையாது என்பதையும் செவிப்பறையில் ஓங்கி அறைந்து சொல்ல வேண்டும்..!

இந்திய சுதந்திரப் போராட்டத்தையும், அதற்காக தன்னுடைய வாழ்க்கையையும் உயிரையும் தியாகம் செய்த தியாகிகளை நன்றியோடு நினைவு கொள்வோம்.





# கல்லூரி மாணவ மாணவிகளுக்கு சைபர் க்ரைம் விழிப்புணர்வு உரை வழங்கிய SP S.ஜெயகுமார் IPS



கடலூர் கந்தசாமி நாயுடு மகளிர் கலைக்கல்லூரியில் கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.S.ஜெயக்குமார் IPS அவர்கள் கல்லூரி மாணவிகளிடம் ஆன்லைன் மூலம் வரும் விளம்பரங்களை பார்த்து ஏமாற கூடாது. OTP தொடர்பான குற்றங்கள் குறித்தும், போலியான App-களில் பெறும் கடன்கள், போலி வேலை வாய்ப்பு குற்றங்கள், வங்கி கணக்குகளில் நடைபெறும் மோசடிகள் குறித்தும், சைபர் கிரைம் இலவச உதவி எண் 1930 மற்றும் www.cybercrime.gov.in குறித்து விளக்கமளித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

மேலும், அண்ணாமலைநகர் காவல் ஆய்வாளர் திரு.அம்பேத்கர் அவர்கள் மீதிகுடி அரசு நடுநிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பெண்களுக்கு எதிரான குற்றங்கள், சாலை பாதுகாப்பு மற்றும் போதை பொருள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

சிறப்பு நிருபர்: P.முத்துகுமரன், கடலூர்.







# தேசிய ஏரோஸ்கேட்டோபால் போட்டியில் தமிழக வீரர், வீராங்கனைகள் முதலிடம்

## திருச்சியில் உற்சாக வரவேற்பு








தேசிய அளவிலான ஏரோஸ்கேட்டோபால் போட்டியில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு திருச்சியில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. 10-வது தேசிய அளவிலான ஏரோஸ்கேட்டோபால் போட்டி மகாராஷ்டிரா மாநிலத்தில் ஜனவரி 11, 12 ஆகிய 2 நாட்கள் கோலாகலமாக நடைபெற்றது. இதில் ஏரோஸ்கேட்டோபால் 1 நிமிடம் ஸ்கேடிங் ரேஸ், ஸ்கேடிங் ஜிக்ஜாக், ஸ்கேடிங் ஸ்லோ வாக் மற்றும் ஸ்கேடிங் ஹர்டில்ஸ் என பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடைபெற்றது.

தமிழகத்தில் இருந்து 10, 14, 18 வயதுக்குட்பட்ட ஆண்கள், பெண்கள் பிரிவினர் மற்றும் சீனியர் ஆண்கள், பெண்கள் பிரிவினர் என 90-க்கும் அதிகமான ஸ்கேடிங் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். பாண்டிச்சேரி, அந்தமான், மகாராஷ்டிரா, ஹரியானா, ஆந்திரபிரதேசம் என 10-க்கும் அதிகமான மாநிலங்களில் இருந்து 500-க்கும் அதிகமான விளையாட்டு வீரர்,வீராங்கனைகள் கலந்து கொண்டனர். இறுதிப் போட்டியில் அதிக புள்ளிகளை பெற்று தேசிய அளவில் தமிழகம் முதல் இடத்தை பிடித்து தங்க கோப்பையை வென்று சாதனை படைத்துள்ளது. பின்னர் தமிழகம் திரும்பிய வீரர், வீராங்கனைகளுக்கு திருச்சியில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் வீரர்களின் பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த சாதனையை நிகழ்த்தியதற்கு காரணமாக இருந்த தமிழ்நாடு ஏரோஸ்கேட்டோபால் சங்க தலைவர் ராகேஷ் சுப்ரமணியன், செயலாளர் பிரவீன் ஜான்சன், பொருளாளர் தங்க முருகன் மற்றும் பயிற்சியாளர்கள் அமல் ஜோயல், வினோத் ஆகியோரை வீரர்கள் மற்றும் பெற்றோர்கள் வெகுவாக பாராட்டினர்.

விழாவில் தலைவர் ராகேஷ் சுப்ரமணியன் கூறும் போது, ஏரோஸ் கேட்டோபால் போட்டிக்கு திருச்சியில் ஒரு மைதானம் அமைத்தால் சர்வதேச அளவில் தமிழக வீரர்கள் ஜொலிப்பார்கள். அதற்கு தமிழக முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார். மேலும் தங்கோப்பை வென்ற வீரர், வீராங்கனைகளை பாராட்டி நினைவு பரிசு வழங்கும் விழா திருச்சி திருவெறும்பூர் சினிமா மஹாலில் நடைபெற்றது. இதில், சிறப்பு விருந்தினர்களாக போலீஸ் பார்வை ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன், திருவெறும்பூர் சரக காவல் துறை அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் திருமதி.விஜயலெட்சுமி அவர்கள், RSK பள்ளியின் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு.அந்தோணி லியோ அவர்கள், முக்குலத்தோர் சிறுநிலைப்பள்ளி தாளாளர் திரு.முருகன் அவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகளை பாராட்டி வாழ்த்துரை வழங்கினார்கள்.

தலைமை நிருபர்: S.வேல்முருகன், திருச்சி

# பழநி முருகன் கையில் உள்ள தண்டத்தில் ஒரு கிளி இருக்கிறது..



## அதன் ரகசியம் என்ன?

மதுரையில் தாய் மீனாட்சி கிளி வைத்திருப்பதைப்போல, பழநி மலையில் முருகன் கையிலுள்ள தண்டத்திலும் ஒரு கிளி இருக்கிறது.


முருகனின் அருள்பெற்ற அருணகிரியார் மீது பொறாமை கொண்ட சம்பந்தாண்டான் என்னும் புலவன் அவரை பழிவாங்க நினைத்தான். ஒருசமயம் அவன் வஞ்சனையால் பிரபுடதேவராயன் என்னும் மன்னன் மூலமாக, அருணகிரிநாதரை பாரிஜாத மலர் பறித்துவரும்படி கட்டளையிட செய்தான். அருணகிரியார், தன் உயிரை ஒரு கிளியின் உடலில் செலுத்தி, உடலை திருவண்ணாமலை கோபுரத்தில் கிடத்திவிட்டு தேவலோகம் சென்று பாரிஜாதம் கொண்டு வந்தார். இதனிடையே சம்பந்தாண்டான் அவரது உடலை தகனம் செய்துவிட்டான். கிளி வடிவில் திரும்பிய அருணகிரியார் தன் உடல் காணாமல் போனதால் திகைத்தார். முருகன் அவருக்கு அருள் செய்து தன் தண்டத்தில் அமர்த்திக் கொண்டார். இந்த அமைப்பில், தண்டத்தில் கிளி வடிவில் அருணகிரியாருடன் முருகன்காட்சி தருகிறார்.



முருகன் முதலில் கோபித்து வந்து நின்ற தலம் என்பதால், மலை அடிவாரத்திலுள்ள திருஆவினன்குடி தலமே மூன்றாம் படை வீடு ஆகும். இங்கு முருகன் மயில் மீது அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறார். முருகன் குழந்தை வடிவமாக இருப்பதால் இவருடன் வள்ளி, தெய்வானை இல்லை. இவர் சிவனின் அம்சம் என்பதால் இவரது கருவறை சுற்றுச்சுவரில் தெட்சிணாமூர்த்தி, பிரகாரத்தில் பைரவர், சண்டிகேஸ்வரரும் இருக்கின்றனர்.

பழநிக்கு செல்பவர்கள் முதலில் இங்கிருந்து 4 கி.மீ., தூரத்திலுள்ள பெரியாவுடையாரை தரிசித்துவிட்டு, பின்பு பெரியநாயகியையும், அடுத்து மலையடிவாரத்தில் இருக்கும் திருவாவினன்குடி குழந்தை வேலாயுதரையும் வணங்க வேண்டும். அதன்பின்பே மலைக்கோயிலில் தண்டாயுதபாணியை வணங்க வேண்டும் என்பது ஐதீகம்.

ஓம் சரவண பவ..






# உத்தமர் காந்தி விருது பெற்ற மேட்டுப்பாளையம் காவல் ஆய்வாளரை நேரில் பாராட்டிய கோவை SP Dr.K.கார்த்திகேயன் IPS அவர்கள்

கோவை மாவட்டம் குடியரசு தின விழாவில் உத்தமர் காந்தி விருது பெற்ற மேட்டுப்பாளையம் காவல் ஆய்வாளரை கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.K.கார்த்திகேயன் IPS அவர்கள் நேரில் அழைத்து பாராட்டினார்.

உத்தமர் காந்தியடிகள் காவலர் பதக்கம், கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்தியதில் மெச்சத்தக்க வகையில் தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றும் காவலர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்நிலையில் 76 வது குடியரசு தின விழாவை முன்னிட்டு (26.01.2025) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உத்தமர் காந்தியடிகள் காவலர் விருது மாநிலத்தில் மொத்தம் 5 காவலர்களுக்கு வழங்கப்பட்டது.

இதில் தற்போது மேட்டுப்பாளையம் காவல் ஆய்வாளராக பணிபுரியும் திரு.சின்னகாமணன் அவர்கள் விழுப்புரம் மண்டல மத்திய நுண்ணறிவு பிரிவில் சிறப்பாக பணியாற்றியதற்காக காந்தியடிகள் காவலர் பதக்கத்தை பெற்றுள்ளார். இந்நிலையில் கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.K.கார்த்திகேயன், IPS., அவர்கள் (27.01.2025) உத்தமர் காந்தியடிகள் காவலர் விருது பெற்ற மேட்டுப்பாளையம் காவல் ஆய்வாளர் திரு. சின்னக்காமணன் அவர்களை நேரில் அழைத்து பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

நிருபர்.P.நடராஜ், கோவை.





**செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:**

**editorpoliceparvai@gmail.com**

**செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438**

## கொடைக்கானலில்

# சப்-இன்ஸ்பெக்டர் உடையில் மிரட்டி பணம் பறித்தவர் கைது

கொடைக்கானலில் போலியாக காவலர் உடையுடன் வந்து ரூ.10 ஆயிரம் கேட்டு மிரட்டிய செம்பட்டியைச் சேர்ந்த பொன்னுசாமி மகன் துரைராஜ் என்பவரை கொடைக்கானல் காவல் துறையினர் கைது செய்தனர்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அடுக்கம் பகுதியை சேர்ந்தவர் செல்வம். இவர் சில்லரை முறையில் மதுபானம் விற்றவர். தற்போது திருந்தி 5 மாதங்களுக்கு மேலாக விவசாயம் செய்து வருகிறார். இந்த நிலையில் செல்வத்தின் வீட்டிற்க்கு நபர் ஒருவர், தான் பழனி மதுவிலக்கு காவல் பிரிவை சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் என்று காவல் துறையின் சீருடையுடன் வந்து அறிமுகமாகி உள்ளார்.

மது விற்பனை புகார் சம்மந்தமாக எஸ்.பி. அலுவலகத்திலிருந்து புகாரை விசாரிக்க வந்துள்ளதாகவும், மாதந்தோறும் ரூ.10 ஆயிரம் கொடுக்க வேண்டும் என்றும், தற்போது பணம் கொடுக்கவில்லை என்றால் ஜெயிலில் போட்டு விடுவேன் என மிரட்டியுள்ளார். இதனை கேட்டு பயந்த செல்வம் தன்னிடம் இருந்த ரூ.5 ஆயிரத்தை கொடுத்துள்ளார். அதற்கு அந்த போலி SI-ஆக வந்த துரைராஜ், ஏடிஎம்-ல் மீதி பணத்தை எடுத்து கொடுக்க செல்லி செல்வத்தை பெருமாள் மலைக்கு அழைத்து வந்துள்ளார்.



**கைது செய்யப்பட்ட துரைராஜ்**

ஆனால், அங்கு ஏடிஎம் இயந்திரம் செயல்படாததால், அவரை கொடைக்கானல் நகருக்கு கூட்டி வந்துள்ளார். அப்போது அவரது நடவடிக்கையில் சந்தேகம் அடைந்த செல்வம், கொடைக்கானல் காவல் துறையினருக்கு தகவல் அளித்துள்ளார். இதைத்தொடர்ந்து, போலியாக காவலர் உடையுடன் வந்து மிரட்டி பணம் பறிக்க முயன்ற துரைராஜை காவலர்கள் கைது செய்து விசாரணை மேற்கொண்டு உள்ளனர். கொடைக்கானல் காவல் ஆய்வாளர் பாஸ்கரன் மற்றும் சார்பு ஆய்வாளர் நீலமேகம் ஆகியோர் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். நிருபர்: R.குப்புசாமி, கொடைக்கானல்





# எமனேஸ்வரம் ஜமாத் சபை சார்பில் பொருத்தப்பட்ட கண்காணிப்பு கேமராக்களின் கன்ட்ரோல் ரூமை திறந்து வைத்த பரமக்குடி காவல் துணைக் கண்காணிப்பாளர் சபரிநாதன்

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி எமனேஸ்வரம் முஸ்லிம் ஜமாத் சபையின் சார்பில் ஜவ்வாது புலவர் பள்ளியின் நுழைவு வாயில் மற்றும் தெருக்கள் சர்வீஸ் சாலை வைகை ஆற்றின் கரையில் பொதுமக்கள் முக்கியமாக கூடும் சந்திப்புகளில் ரூபாய் 50 ஆயிரம் மதிப்பீட்டில் சிசிடிவி கேமராக்கள் அமைத்து காவல்துறையினருக்கு குற்ற சம்பவங்களை தடுப்பதற்காக உதவியுள்ளனர்.

கேமராக்கள் பொருத்தப்பட்டு கண்ட்ரோல் ரூமை பரமக்குடி காவல் துணைக் கண்காணிப்பாளர் சபரிநாதன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் நகர் காவல் நிலைய ஆய்வாளர் இளஞ்செழியன் மற்றும் சார்பாய்வாளர்கள் காவலர்கள் மாவட்ட ஐக்கிய ஜமாத் பொதுச் செயலாளர் ஆலம் மாவட்டச் செயலாளர் முகமது இலியாஸ் எமனேஸ்வரம் ஜமாத் சபைத் தலைவர் அகமது மீர் ஜவ்வாது, செயலாளர் ஜனாப் பஷீர் அகமது, பொருளாளர் ஜனாப் சேக் அப்துல்லா, துணைத் தலைவர் ஜனாப் முகமது சேட், துணைச் செயலாளராக ஜனாப் கமால் முஸ்தபா உறுப்பினர்கள் ஜனாப் ராஜாசிக்கந்தர்,ஜனாப் ராஜா முகமது, ஜனாப் அமானுல்லா, ஜனாப் செய்யது இப்ராம்,ஜனாப் இண்டஸ் சாமுதின் உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நிருபர்: இரா.செந்தில்குமார், பரமக்குடி.

செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:
editorpoliceparvai@gmail.com
செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ்,
போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர்,
திருச்சி - 620 012. 9789491438




திருவள்ளூர் மாவட்ட காவல் அலுவலக வளாகத்தில்

# ADDP G.ஹரிகுமார் தலைமையில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன் / குடிமகள் ஆகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசிய லமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறு பாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது
எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன்.
இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்
கிறேன்.

திருவள்ளூர் மாவட்ட காவல் துறையினர் மற்றும் அமைச்சு பணியாளர்கள் கலந்து கொண்டு தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்றுகொண்டனர்.

நிருபர்: AR.முருகேசன், திருவள்ளூர்.





இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்..

# என்றும் இளமையாக வாழ திருமூலர் கூறும் எளிய வழி..

நமது உடலில் நோய் தோன்றக் காரணம் என்னவெனில், உஷ்ணம், காற்று, நீர் ஆகியவை தன்னளவில் இருந்து மிகுதல் அல்லது குறைவதால் தான். இதனாலேயே நோய் தோன்றுகிறது.

உஷ்ணத்தால் பித்த நோய்களும், காற்றினால் வாத நோய்களும், நீரால் கப நோய்களும் உண்டாகின்றன.

நமது தேகத்தை நீட்டித்து, ஆயுளை விருத்தி செய்ய திருமூலர் சித்தர் எளிய வழியை கூறுகிறார்.

ஒருவனுடைய உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றையும் தூய்மை செய்யும் வல்லமை கடுக்காய்க்கு உண்டு என்று குறிப்பிடுகிறார் திருமூலர்.

கடுக்காய்க்கு அமுதம் என்றொரு பெயரும் உண்டு. தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது தோன்றிய அமிர்தத்திற்கு ஒப்பானது கடுக்காயாகும்.

பெற்ற தாயைவிட கடுக்காயை ஒருபடி மேலானது என்று கருதுகின்றனர் சித்தர்கள். கடுக்காய் வயிற்றில் உள்ள கழிவுகளை யெல்லாம் வெளித்தள்ளி, அவனுடைய பிறவிப் பயனை நீட்டித்து வருகிறது.

நமது உடம்புக்கு அறுசுவைகளும் சரிவரத் தரப்பட வேண்டும். எச்சுவை குறைந்தாலும் கூடினாலும் நோய் வரும். நமது அன்றாட உணவில் துவர்ப்பின் ஆதிக்கம் மிகவும் குறைவு. துவர்ப்பு சுவையே ரத்தத்தை விருத்தி செய்வதாகும். ஆனால் உணவில் வாழைப்பூவைத் தவிர்த்து பிற உணவுப் பொருட்கள் துவர்ப்புச் சுவையற்றதாகும்.

பின் எப்படி ரத்த விருத்தியைப் பெறுவது?

அன்றாடம் நமது உணவில் கடுக்காயைச் சேர்த்து வந்தால், நமது உடம்புக்குத் தேவையான துவர்ப்பைத் தேவையான அளவில் பெற்று வரலாம்.கடுக்காய் அனைத்து நாட்டு மருந்துக் கடைகளிலும் கிடைக்கும். கடுக்காயை வாங்கி உள்ளே இருக்கும் பருப்பை எடுத்து விட்டு, நன்கு தூளாக அரைத்து வைத்துக் கொள்ளவும்.

இதில் தினசரி ஒரு ஸ்பூன் அளவு இரவு உணவுக்குப்பின் சாப்பிட்டு வர, நோயில்லா நீடித்த வாழ்க்கையைப் பெறலாம்.

கடுக்காய் குணப்படுத்தும் நோய்கள்

கண் பார்வைக் கோளாறுகள், காது கேளாமை, சுவையின்மை, பித்த நோய்கள், வாய்ப்புண், நாக்குப்புண், மூக்குப்புண், தொண்டைப்புண், இரைப்பைப்புண், குடற்புண், ஆசனப்புண், அக்கி, தேமல், படை, தோல் நோய்கள், உடல் உஷ்ணம், வெள்ளைப்படுதல், மூத்திரக் குழாய்களில் உண்டாகும் புண், மூத்திர எரிச்சல், கல்லடைப்பு, சதையடைப்பு, நீரடைப்பு, பாத எரிச்சல், மூல எரிச்சல். உள்மூலம், சீழ்மூலம், ரத்தமூலம், ரத்தபேதி, பௌத்திரக் கட்டி, சர்க்கரை நோய், இதய நோய், மூட்டு வலி, உடல் பலவீனம், உடல் பருமன், ரத்தக் கோளாறுகள், ஆண்களின் உயிரணுக் குறைபாடுகள் போன்ற அனைத்துக்கும் இறைவன் அருளிய அருமருந்தே கடுக்காய்.

இதை பற்றி சித்தர் கூறும் பாடல்...

“காலை இஞ்சி கடும்பகல் சுக்கு
மாலை கடுக்காய் மண்டலம் உண்டால்
விருத்தனும் பாலனாமே.-”

காலை வெறும் வயிற்றில் இஞ்சி, நண்பகலில் சுக்கு, இரவில் கடுக்காய் என தொடர்ந்து ஒரு மண்டலம் (48 நாட்கள்) சாப்பிட்டுவர, கிழவனும் குமரனாகலாம் என்பதே இந்தப் பாடலின் கருத்தாம். எனவே தொடர்ந்து கடுக்காயை இரவில் சாப்பிட்டு வர நோய்கள் நீங்கி இளமையோடு வாழலாம்.

கடுக்காய் வீடுகளில் கண்டிப்பாய் இருக்க வேண்டிய பொக்கிஷமாகும். “ஆரோக்ய வாழ்வுக்கு நாட்டு வைத்தியம் அவசியம்”

---

# கொடைக்கானல் கஞ்சா செடி வளர்த்து விற்ற மாணவன் கைது

## காவல்துறையினர் அதிரடி

கொடைக்கானல் பாம்பார்புரம் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் கஞ்சா செடி வளர்த்து, கஞ்சா இலையை விற்பனை செய்ய முயன்ற கல்லூரி மாணவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 150 கிராம் எடையுள்ள கஞ்சா செடி பறிமுதல் செய்யப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் செல்லப்புரம் அப்சர்வேட்டரி பகுதியை சேர்ந்தவர் டேனியல் என்ற தினகரன்(19). இவர் பெரியகுளம் பகுதியில் உள்ள ஒரு கல்லூரியில் டிப்ளமோ பயின்று வருகிறார்,

இந்நிலையில் விடுமுறைக்கு வரும் ஊருக்கு வரும் இவர் இப்பகுதியில் உள்ள தனியார் விடுதியில் பணிபுரிந்து வருகிறார்,

இந்நிலையில் இந்த தனியார் விடுதி பின்புறம் உள்ள பகுதியில் கஞ்சா துகள்களை தூவி, 2 கஞ்சா செடிகள் வளர்ந்துள்ளார்.

இதனையடுத்து பொங்கல் விடுமுறைக்கு விடுதியில் எப்பொழுதும்போல் பணிக்கு வந்தவர், இந்த 2 கஞ்சா செடிகளை பறித்து காய வைத்து, விற்பதற்காக கொடைக்கானல் நகர்ப்பகுதிக்கு வந்துள்ளார்.

அப்போது பாம்பார்புரம் பகுதியில் காவல் துறையினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த பகுதிக்கு வந்த தினகரனிடம் சோதனை செய்தபோது கஞ்சா செடி இருப்பது தெரியவந்தது.

இதனையடுத்து அவரை, காவல் துறையினர் கைது செய்து விசாரணை செய்த போது கஞ்சா செடி



வளர்த்து, விற்பனை செய்வதற்காக இருசக்கர வாகனத்தில் வந்தது தெரியவந்தது.

இதனை தொடர்ந்து இந்த கல்லூரி மாணவன் மீது போதை மற்றும் மன மயக்க பொருட்கள் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது, இதனை தொடர்ந்து 150 கிராம் எடையுள்ள சுமார் 4 அரை அடி உயரமுள்ள செடியையும், இருசக்கர வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது, இதனையடுத்து இது போன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது போதை மற்றும் மன மயக்க பொருட்கள் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து சுமார் 10, வருடம் சிறை தண்டனையும் விதிக்கப்படுவதாக காவல் துறை சார்பில் எச்சரிக்கை விடப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

நிருபர்: R.குப்புசாமி, கொடைக்கானல்



## தென்காசி SP திரு S.அரவிந்த் அவர்கள் உத்தரவின் பேரில்

# தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியேற்ற மாவட்ட காவல் துறையினர்

ஜனவரி 30 தீண்டாமை ஒழிப்பு நாளை முன்னிட்டு தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு S.அரவிந்த் அவர்களின் உத்தரவின் பேரில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.வேணுகோபால் அவர்களின் தலைமையில் மாவட்ட காவல் அலுவலகத்தில் பணிபுரியும் அனைத்து காவல்துறையினர் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் இணைந்து தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்றனர். இதேபோல மாவட்டத்தில் உள்ள அனைத்து காவல் நிலையங்களிலும் காவல்துறையினர் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்றனர்.

இதில், இந்திய அரசியலமைப்பின் பால் இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்திய குடிமகன் / குடிமகள் ஆகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமை மனம், வாக்கு, செயல் என்ற வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன் அரசியலமைப்பின் அடிப்படை கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன் என்று உறுதிமொழி எடுக்கப்பட்டது.

நிருபர்: P.அண்ணாமலை, தென்காசி

# புதியவிதமான போதைப்பொருள் பள்ளிகளில் மாணவர்கள் ஜாக்கிரதை



உங்களிடம் பள்ளியில் குழந்தைகள் இல்லாவிட்டாலும் தயவுசெய்து இதைப் பகிரவும். பெற்றோர் இந்த போதைப்பொருளைப் பற்றி அறிந்திருக்க வேண்டும்.

இது "ஸ்ட்ராபெர்ரி குயிக்" எனப்படும் ஒரு புதிய போதைப்பொருள். பள்ளிகளில் தற்போது மிகவும் பயங்கரமான ஒன்று நடந்து கொண்டிருக்கிறது, அதை நாம் அனைவரும் அறிந்திருக்க வேண்டும். ஸ்ட்ராபெர்ரி பாப் ராக்ஸ் (வாயில் சிதறி 'வெடிக்கும்' மிட்டாய்) போல் தோற்றமளிக்கும் ஒரு வகை கிரிஸ்டல் மெத் புழக்கத்தில் உள்ளது. இது ஸ்ட்ராபெர்ரி போலவும் வாசனை வீசுகிறது, மேலும் பள்ளி வளாகங்களில் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

அவர்கள் இதை ஸ்ட்ராபெர்ரி மெத் அல்லது ஸ்ட்ராபெர்ரி குயிக் என்று அழைக்கிறார்கள். குழந்தைகள் இதை மிட்டாய் என்று நினைத்து உட்கொண்டு கடுமையான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள்.

இது சாக்லேட், வேர்க்கடலை வெண்ணெய், கோலா, செர்ரி, திராட்சை மற்றும் ஆரஞ்சு சுவைகளிலும் வருகிறது. தயவுசெய்து உங்கள் குழந்தைகளுக்கு அந்நியர்களிடமிருந்து மிட்டாய் வாங்க வேண்டாம் என்றும், இப்படித் தோற்றமளிக்கும் மிட்டாயை நண்பரிடமிருந்தும் (யாரிடமிருந்து பெற்றுக் கொண்டாரோ, அவரே மிட்டாய் என்று நம்பியிருக்கலாம்) வாங்க வேண்டாம் என்றும், அவர்களிடம் ஏதேனும் இருந்தால் உடனடியாக ஆசிரியர், முதல்வர் போன்றோரிடம் கொடுக்கச் சொல்லுங்கள்.

நிருபர்:R.குப்புசாமி, கொடைக்கானல்

---

## வல்லநாட்டில் நிதி நிறுவனத்தின் நெருக்கடியால் மருந்து குடித்து உயிரிழந்தவரின் வீட்டுக்கு வைக்கப்பட்ட சீல் அகற்றம்

வல்லநாட்டில் நிதி நிறுவனத்தின் நெருக்கடியால் வீட்டை சீல் வைக்க வந்த நிதி நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் காவல்துறையின் முன்னாள் பூச்சி மருந்து குடித்து சங்கரன் உயிரிழந்தார்.

இதற்கு, கண்டனம் தெரிவிக்கும் வகையில் உறவினர்கள் மற்றும் வல்லநாடு கிராமத்து பொதுமக்கள் அனைவரும் தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் ஸ்ரீ வைகுண்டம் டிஎஸ்பி ராமகிருஷ்ணன் மற்றும் ஸ்ரீ வைகுண்டம் தாசில்தார் ரத்னா சங்கர் தலைமையில் உறவினர்கள் மற்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. காலை 7 மணி முதல் மாலை 3:30 மணி வரை நடந்த பேச்சு வார்த்தையில் 2 முறை தோல்வி அடைந்த நிலையில் தற்பொழுது பேச்சுவார்த்தை யில் உடன்பாடு எட்டப்பட்டது.

அதில் உறவினர்களின் கோரிக்கையை ஏற்று உயிரிழந்த சங்கரனின் மகள் மற்றும் மகளுக்கு தலா 4 லட்ச ரூபாய் மற்றும் மனைவிக்கு 2 லட்சமும் மேலும்




மனைவிக்கு அரசு பணியும் வழங்கி சீல் வைக்கப்பட்ட வீட்டை எந்தவித நிபந்தனை மற்றும் கடன் தொகை அல்லாமல் தாசில்தார் மற்றும் ஸ்ரீ வைகுண்டம் டிஎஸ்பி ராமகிருஷ்ணன் வீட்டிற்கு சீல் வைக்கப்பட்டிருந்ததை அகற்றி சாவியை ஒப்படைத்தனர்.

நிருபர்: வி.முருகேசன், கோவில்பட்டி.

# காசோலை வழக்கு






காசோலை ஒரு முக்கிய சட்ட ஆவணமாகக் கருதப்படுகிறது. காசோலையில் குறிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலம்வரை அது செல்லுபடியாகும். காசோலைகள் செல்லாமல் போவது இந்தியாவைப் பொறுத்தவரையில் மிகவும் பிரபலமான ஒரு குற்றம் என்று அறியப்படுகிறது. உச்சநீதிமன்றத்தில் 40 இலட்சம் வழக்குகள் நிலுவையிலுள்ளன. காசோலையில் குறிப்பிட்ட தொகை, காசோலைக் கொடுத்தவருடைய வங்கிக்கணக்கில் இல்லாமல் போனால், அந்த காசோலை bounce ஆகிறது.

ஒரு காசோலை பல காரணங்களால் செல்லாமலாகி விடும். போதுமான தொகை கணக்கில் இல்லாமல் போவது, கையொப்பங்களின் வேறுபாடு, உயிரிழந்த (State), காசோலைகள், பிற்கால தேதி இட்ட காசோலைகள் (post dated cheques), காசோலைகளில், பொறுப்பு ஏற்காமல், செய்யப்படும் திருத்தங்கள் – என்ற காரணங்களால் காசோலைகள் செல்லாததாகி விடுகின்றன. ஒரு காசோலை bounce ஆகும்போது, அதைக் கொடுத்தவரிடமிருந்து (default-er) வங்கி அபராதம் வசூலிக்கிறது.

இந்தியாவில் காசோலை வங்கியில் பணமின்றி திரும்பும்போது, இது ஒரு தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுகிறது. எனவே, Negotiable Instruments Act, 1881 படி, செல்லாத காசோலை வழங்கியவருக்கு கடுமையான அபராதமும், சிறைத்தண்டனையும் விதிக்கப்படுகின்றன.

**செல்லாத காசோலை வழங்கப்பட்டால், அதற்குரிய சட்ட நிவாரணம் என்ன?**

அனைத்து வங்கிகளும், செல்லுபடியாகாத காசோலையுடன் சேர்த்து, ஒரு 'Cheque Return Memo'வும், காசோலை Dishonour ஆனதற்கான விளக்கமும் அளிக்கின்றன.

உங்களிடம் காசோலை இருந்தால், உடனடியாக காசோலை வழங்கியவருக்கு தகவல்தெரிவியுங்கள். அந்தக் காசோலையை மூன்று மாதத்திற்குள் மீண்டும் வங்கியில் கொடுக்கலாமா என்று அவரிடம் கேளுங்கள். காசோலை இரண்டாம் முறையும் bounce ஆனால், நீங்கள் சட்டபூர்வ நடவடிக்கைகளை எடுக்கலாம்.

முதல் நடவடிக்கையாக, CR memo கிடைத்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நீங்கள் காசோலை தந்தவருக்கு சட்ட தகவல் (legal notice) அனுப்பலாம். அந்த தகவல் அறிக்கையில் சகல தகவல்களையும் குறிப்பிட வேண்டும். முதல் தடவை காசோலை Bounce ஆன செய்தியையும் குறிப்பிட வேண்டும். இந்த Notice கிடைத்த தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் காசோலைக்காரர் அந்தத் தொகையைக்கட்டி வைக்க வேண்டும்.

குறிப்பிட்ட காலத்திற்குள் அவர் தொகையை வங்கியில் கட்டவில்லை என்றால், நீங்கள் Magistrate

Court இல் புகார் மனுதாக்கல் செய்யலாம். 15 நாள் கெடு முடிந்து அதிகபட்சம் ஒரு மாதத்திற்குள் இந்த வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும்.

குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும். இது செய்யப்படாவிட்டால், இந்த வழக்கு காலம் கடந்த வழக்காகக் கருதப்பட்டு, நீதிமன்றத்தில் அனுமதிக்கப்படும் வாய்ப்பை இழந்துவிடும்.

உங்கள் வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும்போது, ஏமாற்றியவருக்கு 2 வருட சிறைத்தண்டனை கிடைக்கும். மேலும், காசோலைத் தொகையைப் போல இரண்டு மடங்கு அபராதம் விதிக்கப்படும். காசோலைக்காரர், தீர்ப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள், இந்த ஆணையை எதிர்த்து மேல்முறையீடு செய்யலாம்.

**வாடகை காசோலை bounce ஆனால்**

பொதுவாக வீட்டு உடமையாளர்கள், வாடகைக்காரர்களிடமிருந்து, (post & dated cheques) பின் தேதியிட்ட காசோலைகள் பெறுவது வழக்கம். வாடகைக் காசோலை, வங்கியிடமிருந்து திரும்ப வந்தால், வீட்டுக்காரர், மேலே, பதிவு செய்யப்பட்ட வழிமுறைகளை மேற்கொள்ளலாம். சில சமயங்களில், வாடகைக்காரரிடம் போதுமான தொகை இல்லாமல் இருக்கும்.

வீட்டுக்காரர் சரியான நேரத்தில் காசோலையை வங்கியில் தாக்கல் செய்யாமல் இருந்திருக்கலாம். எனவே, வீட்டுக்காரர் வாடகைக்காரரிடம் முதலில் சட்ட நடவடிக்கைகளைப் பற்றித் தகவல் தெரிவிக்கலாம். அதன் பிறகு நீதியின் படிகளில் ஏறலாம். சில சமயங்களில், வீட்டுக்காரரால் ஏற்பட்ட செலவுகளுக்காக, வாடகைக்காரர் வாடகையிலிருந்து ஒரு தொகையை செலவு செய்திருக்கலாம். அந்நிலையில் காசோலை bounce ஆகலாம். வழக்கு தொடரலாம். வாடகைக்காரர் உண்மையை நிரூபிக்க வேண்டும்.

**EMI தவணைத் தொகை bounce ஆனால்**

ஒரு கடனுக்காகக் கொடுக்கப்பட்ட EMI காசோலைகள் bounce ஆனால், வங்கியும், காசோலைக் கொடுத்தவர் மேல் வழக்குத் தொடரலாம். ஆனால், வங்கிகள் இந்த முயற்சியில் பொதுவாக இறங்குவதில்லை. முதலில், அதிக அபராதம் Loan Default Charges, Cheque Bounce Charges - இவை வசூலிக்கப்படுகின்றன. இந்த கட்டணங்கள் ஒவ்வொரு மாதமும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. இது EMI தொகையுடன் சேர்க்கப்படுகிறது.

மேலும், ஒவ்வொரு மாதமும், காசோலை கொடுத்தவரின் credit rating பாதிக்கப்படுகின்றது. Secured Loans,- யைப் பொறுத்தவரையில், வங்கிகளுக்கு, Security-க்காக கொடுக்கப்பட்ட ஆவணங்கள், Collateral Security-யாக பணத்திற்குப் பாதுகாப்பளிக்கிறது. பலமுறை ஞாபக மூட்டிய பிறகும், கடன் வாங்கியவர் பணத்தைத் திருப்பிக் கொடுக்காவிட்டால், வங்கி போதுமான எச்சரிக்கைத் தகவல் அனுப்பியபின், அந்த security property-யை ஏலத்தில் கொண்டுவந்து, அவர் பெற்றுக்கொண்ட கடன் தொகையை மீட்டுக் கொள்ளலாம்.

**ஒரு வர்த்தக உடன்படிக்கையில் காசோலை bounce ஆனால்**

வியாபாரத்துறையினரிடமிருந்து, நீங்கள் ஒரு காசோலை பெற்றால், அது bounce ஆகும் நிலையில், அவரிடமிருந்து பாக்கியைப் பெறுவதற்கு, நீங்கள் மேற்கூறிய முறையை மேற்கொள்ள வேண்டும். வர்த்தகத் துறை உடன்படிக்கைகளில், (bounced cheques) செல்லாக் காசோலைகள் இருக்கும் பட்சத்தில், வர்த்தக சமூகத்தில் பெயர் கெட்டுப்போகும் நிலை உருவாகலாம். இதனால், சமூக அந்தஸ்து பெருமளவில் பாதிக்கப்படும். இது பொருளாதார இழப்பீட்டை விட பன்மடங்கு மோசமானது.

நீதிமன்றங்களில் செல்லாக் காசோலைகள் தொடர்பான வழக்குகள் இலட்சக்கணக்கில் நிலுவையில் இருப்பதால், மத்திய அரசு Negotiable Instruments Act- இல் பல திருத்தங்களைக் கொண்டுவர உத்தேசித்துள்ளது.

இதன் மூலம், நீதிமன்றத்தில் வழக்குகளின் எண்ணிக்கை பெருமளவில் குறையும் என்று நம்பப்படுகிறது.

ஊடகங்களிலிருந்து கசியும் தகவல்கள்படி, வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்காத defaulter எதிர்காலத்தில் சிறைத் தண்டனை பெறமாட்டார். சகல வழக்குகளுக்கும் Lok Adalath மூலமாகத் தீர்வு காணப்படும். இந்தத் திட்டம், சாமானிய மக்களின் விமர்சனத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

இதுபோன்ற காசோலைக் குற்றங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. மிகவும் தீவிரமான தண்டனை கொடுத்தால், இத்தகைய குற்றங்கள் பெருமளவில் குறைய வாய்ப்பு உள்ளது.



## லோன் பெற்ற ஒருவர் இறந்துவிட்டால்

# நிலுவைத் தொகையை யார் செலுத்துவது வங்கிகளின் விதிமுறை என்ன?

இன்றைய காலகட்டத்தில் ஒருவரின் சம்பாத்தியத்தை வைத்து செலவுகளைச் சமாளிக்க முடிவதில்லை.

இதனால் பலரும் கடன் வாங்குகின்றனர். அப்படி கடன் வாங்கிய பிறகு கடன் வழங்குனர் கூறிய காலகட்டத்திற்குள் அதை திருப்பிச் செலுத்த வேண்டும்.

ஒரு வேலை கடன் வாங்கியவர் ஒரு ஈஎம்ஐ தவணையைத் தவறவிட்டாலும் அதற்கு கடன் வழங்குனர் அபராதம் விதிக்கவோ அல்லது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கவோ உரிமையுண்டு.

ஆனால் கடன் காலத்தின் போது கடன் பெற்றவர் இறந்துவிட்டால் அந்த கடனுக்கு யார் பொறுப்பு என்று என்றாவது யோசித்திருக்கிறீர்களா?

இந்தப் பதிவில் அது குறித்த விவரங்களை பார்ப்போம்.

கடன் காலத்தில் ஒருவர் இறந்து விட்டால் அந்த கடன் தொகைக்கு யார் பொறுப்பு?

**ஹோம் லோன்**

ஹோம் லோன்களை பொறுத்தவரையில் கடன் பெற்றவர் வேறு ஒருவனுடன் இணைந்து கடன் பெற்றிருந்தால் இறந்தவருக்காக மற்றொருவரை கடன் வழங்குனர் தேடுவர்.

ஒருவேளை தனிநபராக கடன் பெற்றிருந்தால் இறந்தவரின் சட்டப்பூர்வ வாரிசை கடன் வழங்குநர் அணுகலாம். அதோடு கடன் பெற்றவர் ஹோம் லோன் இன்சூரன்ஸ் பெற்றிருந்தால் கவலை இல்லை.

நிலுவையில் உள்ள கடன் தொகை காப்பீடு மூலம் செலுத்தப்படும். மாறாக கடன் பெற்றவர் டெர்ம் இன்சூரன்ஸ் மட்டுமே பெற்றிருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் அந்தத் தொகையானது நாமினியின் கணக்கில் டெபாசிட் செய்யப்பட்டு, செயல்முறைகளை பின்பற்றி சட்டபூர்வ வாரிசுக்கு வழங்கப்படும்.

அதன் பிறகு இறந்தவரின் வீட்டு கடன் மற்றும் பிற கடன்களை செலுத்துவதற்கு இந்த டேர்ம் இன்சூரன்ஸ் தொகையை சட்டபூர்வ வாரிசுகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**கார் கடன்**

கார் கடன்களை செலுத்தும் போது கடன் வாங்கியவர் இறந்துவிட்டால் கடன் வழங்குனர் மீதமுள்ள தொகையை வசூலிக்க கடன் வாங்கியவரின் குடும்பத்தை பார்வையிடலாம்.

வாகனம் வாங்குவதில் ஆர்வமுள்ள வாரிசுகள் இருந்தால் மீதமுள்ள நிலுவைத் தொகையை அந்த வாரிசு திருப்பிச் செலுத்த வேண்டும்.

ஒரு வேலை கடன் தொகையை திருப்பி செலுத்த சட்டபூர்வ வாரிசுகள் மறுத்தால், கடன் வழங்குனர் வாகனங்களை பறிமுதல் செய்து, ஏலம் விட்டு, அதன் மூலம் தங்களுடைய இழப்பை ஈடுசெய்வதற்கு உரிமையுண்டு.

**தனிநபர் மற்றும் கிரெடிட் கார்டு கடன்கள்**

பிணையத்தை வைத்து வாங்கும் கடன்களுக்கு மாறாக கிரெடிட் கார்ட் கடன்கள் மற்றும் தனிநபர் கடன்கள் அன்செக்யூர்டு லோன்களாகக் கருதப்படுகின்றன.

இதற்கு எந்த ஒரு சொத்தையும் வைத்து கடன் பெற வேண்டிய அவசியம் இல்லை. கடன் காலத்தில் கடன் வாங்கியவர் இறந்துவிட்டால் நிலுவைத் தொகையை சட்டபூர்வ வாரிசு அல்லது குடும்ப உறுப்பினர்கள் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை கிடையாது.


ஒருவேளை கடன் பெற்றவரோடு இணைந்து இன்னொருவரும் கடன் பெற்றிருந்தால் வங்கி அந்த நபரிடம் கடன் தொகையை வசூலிக்கலாம்.

ஆனால் இணைந்து கடன் வாங்கியவர் இல்லை என்றால் கடனை மீட்கும் மாற்று வழிகள் இல்லாத நிலையில் கடன் வழங்குனர் கடனை செயல்படாத சொத்தாக வகைப்படுத்தும்.

–**K.T.சிவக்குமார்** BA.,BL.
Cell: 94432 73773

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**





தேனி மாவட்டம் எரசையில் தை மாத அமாவாசையையொட்டி கருட சித்தர் ஆசிரமத்தில் உலக நன்மைக்காக மகா யாக வேள்வியும், வழிபாடும் நடத்தப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு கருட சித்தர் சுவாமிகளிடம் ஆசி பெற்றனர்.



POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520, Date of publication Everymonth 1st week.
Postel Registration Number TN/TBM/187/2023-25 Posted between 8-14 Every Month. Posted at - patrikachannel Egmore




–::: தொடர்புக்கு :::–

**786 78 28 203, 638 298 5562**

4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542

TO